# திராவிடம் – தமிழ்த்தேசியம்

## ஒரு விளக்கம்

**தோழர் கா.கருமலையப்பன்**
திருப்பூர் மாவட்டச்செயலாளர்
பெரியார் திராவிடர் கழகம்

வெளியீடு:
**பெரியார் திராவிடர் கழகம்**
29. இதழியலாளர் குடியிருப்பு
திருவள்ளுவர் நகர் - திருவான்மியூர்
சென்னை - 600 041

**நூல் கிடைக்குமிடம்**

பெரியார் படிப்பகம்
பேருந்து நிலையம் அருகில்
மேட்டூர் அணை - 636 401
9786316155

பெரியார் படிப்பகம்
அரசு விரைவுப் பேருந்து நிலையம் அருகில்
காந்திபுரம் - கோவை
9843323153

**நன்கொடை : உரு 15.00**

விமர்சனங்களை அனுப்ப - periyardk@gmail.com

www.periyardk.org

பதிப்பு ஆண்டு : 2009 செப்டம்பர் 17



# திராவிடம் – தமிழ்த் தேசியம்: ஒரு விளக்கம்

தந்தை பெரியார் காலந்தொட்டு ஏறத்தாழ 60, 70 ஆண்டுகளாக திராவிடம், திராவிடர் என்பதற்கான வரலாற்று ஆதாரங்களை திராவிடர் இயக்கம் எடுத்துக்காட்டி நிரூபித்து வருகின்றது. ஆனாலும் அவ்வப்போது குழப்பவாதிகள் சிலர் திராவிடம், திராவிடர் என்பது பொய்யானது. மாயையானது என்ற கருத்தைப் பரப்புவது தொடர்ந்து கொண்டே இருக்கிறது. சமீபத்திலும் புதிய கூட்டம் ஒன்று வம்படியாக பழைய பல்லவியைப் பாடி ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கிறது. சாதி, சமய ஏற்றத் தாழ்வுகளை அழித்து, மானமும் அறிவும் உள்ள மக்களாக திராவிடர்களை உருவாக்கப் போராடிய தந்தை பெரியாரின் பணியைத் தொடர்ந்து செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ள நாம், லாவணிக் கச்சேரி நடத்த விரும்பாமல் இருந்தோம். எனென்றால் நம் முன்னால் உள்ள கடமைகள் மிகப் பெரியது, அதை விடுத்து சொல் ஆராய்ச்சிகள் என்ற பெயரால் சொரிந்து கொண்டு சுகம் காணக் கூடியவர்கள் அல்ல நாம். சொல் ஆராய்ச்சி செய்து சொற்போர் நடத்துவதை விட களம் கண்டு செயலாற்றும் செயல் வீரர்கள் பெரியார் தொண்டர்கள் என்பது வரலாற்றுப் பக்கங்களில் நிறைந்த செய்தி களாகும்.

ஆனால், புதிய பூசாரிகளின் ஆட்டம் அதிகமாகி விட்டது. இவர்கள் போராடி தனித் தமிழ்நாடு பெற்று விட்டதைப் போலவும், அந்த சமயத்தில்,“இல்லை, இல்லை தமிழர்களாகிய நீங்களெல்லாம் ‘திராவிடத்தை தூக்கிச் சுமந்தவர்கள்’, அதனால் தனித் தமிழ் நாடு உங்களுக்கு இல்லை” என்று யாரோ தடுத்து விட்டதைப் போலவும் - திராவிடம், திராவிடர் என்ற கருத்தியலுக்கு எதிராக வரிந்து கட்டிக் கொண்டு வாய்ப்பு நேரும் போதெல்லாம் பேசியும் எழுதியும் வருகின்றனர்.

இந்நிலையில் அவர்களுடைய மூடுமந்திர ஆய்வை (?) கிழித்தெறிந்து உண்மையான வரலாற்று ஆதாரங்களை வெளிக் கொணரவேண்டிய நிலையிலேயே நாம் இந்த மறுப்பை வெளியிட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. தமிழ் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் தோழர் பெ. மணியரசன் எழுதிய "திராவிடம் - தமிழ்த் தேசியம்" என்ற ஒரு சிறு வெளியீடும். பழ. நெடுமாறன் அவர்கள் நடத்தும் தென்செய்தி வாரஇதழில் (அக்-16-31-2006) "திராவிட மாயை அழியட்டும்" என்ற தலைப்பில் முனைவர் அ.காமாட்சிநாதன் எழுதிய கட்டுரையும், தமிழ் தேசிய வாதிகள் என்பவர்களால், திராவிடர் இயக்கத்தை கொச்சைப் படுத்தும் வகையில் விமர்சித்து எழுதப்பட்டு சமீபத்தில் வெளிவந்துள்ளது.

தமிழுக்கும், தமிழ் தேசியவாதிகளுக்கும் நாம் எதிரானவர் கள் அல்ல. ஆனால் தமிழ்தேசியவாதிகள் திராவிடத்திற்கும் திராவிடர்களுக்கும் எதிராகவே இருந்து வருகின்றனர். தோழர் மணியரசன் எழுதிய திராவிடம் தமிழ்த் தேசியம் என்ற நூலில் மிகக் கடுமையாகவும் கொச்சையாகவும் திராவிடர் இயக்கத்தை குறிப்பிட்டு உள்ளார். அவருடைய அர்த்தமற்ற, வரலாற்று உண்மை களை மறைத்திட்ட பொய்யுரைகளை அம்பலப்படுத்த வேண்டிய வரலாற்றுக் கடமை ஒவ்வொரு தமிழருக்கும் உண்டு. அதிலும் குறிப்பாக, பார்ப்பன ஆதிக்கத்தால் பல்வேறு நிலை களிலும் அடக்கப்பட்டு கேவலமான வாழ்நிலையில் உழன்று கொண்டிருந்த தமிழினத்தை சுயமரியாதை உள்ளவர்களாக மாற்றிட தன்னலம் கருதாது உழைத்திட்ட தந்தை பெரியாரின் தொண்டர்களான எங்களுக்கு அதிக பொறுப்பு உண்டு.தோழர் மணியரசன் நூலில் வரிக்குவரி குழப்பமும் குதர்க் கமுமே மேலோங்கி இருக்கிறது. அதை ஒவ்வொன்றாக நாம் அலசி ஆராய்வோம்.

முதலில், திராவிடம், திராவிடர் என்பது பற்றி தோழர் மணியரசன் என்ன கூறுகிறார். அது உண்மையிலேயே சரியானது தானா என்பதை ஆதாரங்கள் மூலம் சரி பார்ப்போம். தோழர் மணியரசன் கூறுகிறார்.

1. திராவிடமும், இந்திய தேசியமும் புனைவுத் தன்மை கொண்டவை.

2. திராவிடம் ஒரு தேசமல்ல- மொழியுமல்ல- இனமுமல்ல.

(மேற்கண்ட வாக்கியத்தை தோழர் மணியரசன் எத்தனை முறை கையாண்டுள்ளார் என்பதைகணக்கிட்டுச் சொல்பவர் களுக்கு ஒரு பரிசே அறிவிக்கலாம்.- அவர் நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் அவ்வாக்கியம் நிறைந்து கிடக்கிறது. அவருக்கு திராவிடம்- திராவிடர்என்பது மீது அவ்வளவு வெறி, ஆத்திரம், காழ்ப்புணர்ச்சி)

3. திராவிடம் என்பது ஆரியரும் அயல் இனத்தாரும் சுமத்திய போலிப் பெயர்கள்

4. திராவிடர் என்று ஓர் இனம் இருந்ததற்கு வரலாற்றுச் சான்று உண்டா? மேல் நாட்டு ஆராய்ச்சியாளர்கள் யாராவது ஆதாரம் காட்டிள்ளார்களா?

5. 20-ஆம் நூற்றாண்டு அரசியல் தான் தமிழர்களை திராவிடர் என்ற பார்ப்பனியப் பெயரால்

அழைக்கிறது.- திராவிடர் என்பது தமிழ் இனத் திற்கு இன்னொரு பெயரல்ல.

6. தமிழ், தமிழர், தமிழம் என்பதை சரியாக ஒலிக்கத் தெரி யாமல் அயல் இனத்தவரான ஆரியர் "த்ரமிள, திராவிட" என்று அழைத்தனர் என்பார் பாவாணர்.

7. ஆரிய இதிகாசக் கதைகளை அடிப்படையாக வைத்தே இராமாயணம் ஆரிய- திராவிட போராட்டம் என்றார் நேரு.

8. சமஸ்கிருத மொழிக்குடும்பம் இருப்பதாலேயே சமஸ்கிருதர் என்று ஓர் இனம் இருப்பதாகக் கொள்வ தில்லை, அதேபோல் 'திராவிட மொழிக்குடும்பம் இருப்ப தாலேயே திராவிடர் என்ற ஓர் இனம் இருப்பதாக வரை யறுக்க முடியாது.

9. திராவிடர் என்ற மரபினம் (Race) ஒன்று இருந்ததில்லை. அப் பெயரில் ஒரு தேசிய இனமும் (Nationality) இல்லை.

10. ஆரியர் ஒலிக்கத் தெரியாமல் தமிழ் மரபினத்தைச் சுட்டிய 'திராவிட' என்ற சொல்லை மட்டுமே பெரியார் ஆதாரம் காட்டுகிறார்.

11. தாயுமானவரின் "கல்லாத பேர்களே நல்லவர்" என்ற பாடலில் திராவிடம் வருகிறது. அங்கேயும் திராவிடம் என்பது மொழியின் பெயராக வருகிறதே அன்றி இனத்தின் பெயராக வரவில்லை.

12. ஆரியம் உருவாக்கிய அவியல் சொல்லான

திராவிடத்தை ஆரியத்திற்கெதிரான சொல்லாக தோழர் கொளத்தூர் மணி குறிப்பது முற்றிலும் முரண்பாடாக உள்ளது.

13. தமிழர் இருந்தனர். ஆரியர் இருந்தனர். திராவிடர் என்று யாரும் இல்லை.

14. தமிழைத் திராவிடத்தோடு சேர்க்கக் கூடாது. தமிழைத் தனியாகக் குறிக்க வேண்டும். தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகளைத் திராவிட மொழிகள் என்று குறிக்க வேண்டும் என்று பாவாணர் கூறுகிறார்.

15. பாவாணர் இனமொழி என்று குறிப்பிடுவது மொழிக் குடும்பத்தையே ஆகும் திராவிடர் இனம் அல்லது தமிழர் இனம் என்ற பொருளில் அல்ல. பாவாணர் ஆய்வின் படி திராவிடம் என்பதில் தமிழரும் வரமாட்டார். தமிழும் வராது. பாவாணர் கூற்று எவ்வளவு சரியானது.

16. தமிழ்நாட்டைத் திராவிட நாடு என்றும் தமிழரைத் திராவிடர் என்றும் கூறும் வடமொழி அல்லாத, ஆரியப் பார்ப்பனர் கைச்சரக் கல்லாத, வேறு வரலாற்று ஆதாரங் களைத் தமிழும் காட்டவில்லை. மெகஸ்தனிஸ், தாலமி போன்ற பழைய மேற்கத்திய நூலாசிரியர்களும் காட்ட வில்லை.

17. மூலமொழி ஒன்று இருந்திருக்கலாம் என்பதில் நமக்கு கருத்து வேறுபாடில்லை. அந்த மூலமொழிக்குத் திராவிடம் என்று பெயர் இருந்தது என்பதைத் தான் நாம் மறுக்கி றோம். அந்த மூலலொழி தமிழ் தான் என்பது பாவாணர் கருத்து.

கடந்த காலங்களில் திராவிடம், திராவிடர் என்பதற்கான ஆதாரங்களாக மேலை நாட்டு ஆய்வாளர்கள் கருத்து, மொழியி யலாளர்கள் கருத்து, மனு நீதி, புராணம், இதிகாசம் என்பவற்றில் இருந்து பல்வேறு செய்திகள் எடுத்தாளப்பட்டது.

இதில் மனு நீதி, புராணம், இதிகாசம் போன்றவைகள் பார்ப்பனர்களின் கருத்து, எனவே, இதை ஏற்றுக் கொள்ள முடி யாது என்று தோழர் மணியரசன் கூறுகிறார். ஆகவே, அவருடைய கேள்வி யின் படியே மேலை நாட்டு ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்களை, ஆய்வை பார்ப்போம்.

முதலில், சோவியத் அறிஞர் அலெக்சாந்தர் காந்திரதாவ் (Alexander kondradov) ரசிய மொழியில் எழுதிய முப்பெருங்கடற்



புதிர்கள் (The Riddles ot the three oceans) என்னும் நூலில் உள்ள செய்திகளை ஆதாரமாக அறிவோம்.

"அவர் ஆசியவியலாளர், பண்டை நாகரிக எழுத்துக்களைப் படித்தறியும் முயற்சிகளில் ஈடுபட்டவர், அறிவியல் செய்திகளைப் பொதுமக்களுக்குப் புரியும் வகையில் எழுதியவர் (17 நூல்கள், நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள்) சிந்துவெளி நாகரிக முத்திரை எழுத்துக்களை 1965 இல் திராவிட மொழி என கண்டுணர்ந்த சோவியத் அறிஞர் குழுவினருள் ஒருவர்"

(தமிழர் நாகரிமும் சிந்துவெளி நாகரிகமும் - தென்பெருங் கடல் ஆய்வுகள் நூலின் முன்னுரையில் பி. இராமநாதன்) (தமிழ்மண் பதிப்பகம் )

"தமிழர் நாகரிகம் தொன்மையானது. தமிழ் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது. இந்தியாவின் மிகத் தொன்மை யான இனத்தைச் சார்ந்தவர்களான திராவிட மொழி பேசுநர் எண்ணிக்கை 10 கோடிக்கும் அதிகமாகும் (1974) இந்துக்களின் புனித நூலான ரிக்வேதத் தில் வரும் முரட்டு நாடோடிகளான ஆரியர் இந்தியாவுக்குள் நுழையு முன்னரே இங்கு வாழ்ந்தி ருந்தவர் திராவிடராவார். இன்று தென்னிந்தியாவில் பெரும் பாலும் திராவிட மொழிகளே பேசப்பட்டு வருகின்றன. ஆனால், பழங்காலத்தில் மத்திய, வடஇந்தியப் பகுதிக ளிலும் திராவிட மொழிகள் பேசுநரே வாழ்ந்திருந்தனர்".

(தென் பெருங்கடல் ஆய்வுகள்- அ.காந்திரதாவ் - பக்- 38)

"சிந்துவெளி நாகரிக மொழியின் இனமொழி என்று உரிமை கொண்டாடிய சமஸ்கிருதம், ஹிட்டைட், ஹரியன், ரபானுய் போன்ற மொழிகள் எவையும் சிந்து வெளி மொழி யோடு தொடர்பற்றவை என்பதை சோவியத் வல்லுநர் ஆய்வு நிறுவியது. எஞ்சி இருந்தவை திராவிட மொழிகளே! அவற்றின் அமைப்புதான் X மொழியின் (சிந்துவெளி மொழியை சோவியத் குழுவினர் X என்று குறித்து ஆய்வு செய்தனர்.) அமைப்பு போன்று இருந்தது. ஏற்கனவே அறிஞர் பலர் சிந்துவெளி நாகரிகம் திராவிட மொழிகளைப் ( அல்லது மொழியைப்) பேசும். மக்கள் உருவாக் கியதே என்று தெரிவித்திருந்த முடிவை சோவியத் ஆய்வாளர் முடிவு அரண் செய்வதாக அமைந்தது". (மேற்கண்ட நூல்- பக்-40)

"சுமெரியர்களுக்கு முந்திய உபெய்து மொழியும். சிந்து வெளி நாகரிகத் திராவிட மொழியும் மிக நெருங்கியவை என்று கண்டோம்."

(மேற்கண்டநூல்-பக்-44,4)

"வரலாற்று மொழி நூல் வல்லுநர் ஐ. டயகொனாவ் "பண்டைய ஆசிய மைனரின் தொன் மொழிகள்" என்னும் தமது நூலில் சில சான்றுகளைக் கொண்டு நோக்குமிடத்து எலாம் மொழியும் திராவிட மொழிக் குடும்பமும் உறவுடையன என்ற கோட்பாடே சரியாக இருக்கலாம்' என்று உறுகிறார்"

(மேற் கண்ட நூல்-பக்-47)

" தென்னிந்தியாவில் தான் திராவிட மொழி பேசும் மக்கள் அதிகமாக இருப்பதினால் திராவிடமொழி பேசுநர் தெற்கிலிருந்து வடக்காகப்பரவினர் என்றும், அவர்கள் வடக்கு வடமேற்கிலிருந்து இந்தியாவிற்கு தேறியவர்கள் அல்லர் என்றும் தெரி கிறது"-(மே.கண்ட நூல்5)

"திராவிடர்களின் பழைய தொன்மங்களின் படி அவர்களது தாயகம் இன்று இந்திய மாக்கடலில் மூழ்கிக் கிடக்கும் நிலப் பகுதியாகும். இந்தியமாக்கடலில் மூழ்கிக் கிடப்பதாகக் கருதப்படுவதும் லெமூரியா என நம் காலத்தவர் பெயர் சூட்டியுள்ளதுமான நிலப் பகுதியே அதுவாகலாம்."

(மேற்கண்ட நூல் -பக் 55,56)

"சுவீடன் நாட்டில் லண்டு என்னும் நகரைச்சேர்ந்த என்.எம் ஹெம்லர் 1963 - இல் வெளியிட்ட 'ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் மொழிகளின் வரலாறும், இலக்கண அமைப்பும்" என்றும் நூலில் திராவிட, ஆஸ்திரேலிய மொழிகளின் இலக்கண அமைப்புகளும், ஒலியின் அமைப்புகளும் ஒன்று போலவே உள்ளன என்று நிறுவியுள்ளார்

(மேற்கண்ட நூல் -பக் 55,56)

திராவிட மொழியின் இருப்பையும், தொடர்பையும் திராவிடர்கள் வாழ்ந்த நிலப் பகுதியையும் சோவியத் அறிஞர் குழுவில் ஒருவரான அலெக்சாண்டர் காந்திரதாவ் அவர்களின் ஆய்வின்படி கண்டோம். அலெக்சாண்டர் காந்திரதாவ் எழுதிய முப்பெருங் கடற் புதிர்கள் நூலை தமிழாக்கம் செய்த பி. இராமநாதன் அந்நூலின் முன்னுரையில் குறிப்பிட்ட வரலாற்றுச் சான்றுகள் வருமாறு:-

"திராவிட மொழி பேசுநர் வடக்கு நோக்கிப் பரவினர் என்றும் திராவிடர் ஏற்றம் (Dravidian ascent froum south) கொள்கையை ஏற்று வலியுறுத்தியுள்ள அறிஞர்கள் ஹச். ஆர். ஹால், ஹீராஸ் பாதிரியார். பி.தி. சீநிவாச ஐயங்கார், வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர், கா. சுப்பிர மணியபிள்ளை, மறைமலையடிகள். யு. ஆர். எஹ்ரென் பெல்ஸ், சேவியர் தனி நாயகம் அடிகளார். ஞா. தேவநேயப் பாவாணர், கே.கே.பிள்ளை போன்றோர் ஆவர்".(பக்- 3,4)



"சிந்துவெளி நாகரிகமும் அந்நாகரிக முத்திரை எழுத்துகளும் திராவிடம் (தொல் தமிழ்) சார்ந்தவையே என்று சிறந்த ஆய்வாளர் கள் கமில் சுவெலபில் (1990 : திராவிட மொழியியல் - ஓர் அறிமுகம், இயல் -6, திராவிட மொழிகளும் ஹாரப்பா மொழியும்) அஸ்கோ பர்போலா (ப்ரண்ட்லைன் அக்-24, 2000) கருதுவதை யெல்லாம் அக்கட்டுரையில் சுமதி ராமசாமி கண்டு கொள்ளவில்லை". (-பக்-8)

'ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த திராவிடர்' என்று தன்னை அழைத் துக் கொண்ட எஸ். ஹீராஸ் பாதிரியார் (11.9.1888-14.12.1955) தொன்மை இந்தோ நண்ணிலக்கரை நாகரிக ஆய்வு ( Studies in proto-Indo mediterranean Culture-1953 ) என்னும் நூலில் சிந்து வெளி நாகரிகம் திராவிடருடையது. அவர்கள் மொழி திராவிட மொழி என்பதை நிறுவியுள்ளார்." (பக்-18)

"இந்தோ ஆரிய மொழியின் ரிக்வேத நிலையிலேயே நுழைந்துள்ள திராவிடச் சொற்களாக சுமார் நாற்பது-ஐம்பது சொற்களை பரோ, எமனோ போன்றவர்கள் ஏற்கெனவே அடையாளம் கண்டுள் ளனர். திராவிடமொழியியல் - ஓர் அறிமுகம்(1990) நூலில் இதைக் குறிப்பிடும் சுவெலபில்,ரிக் வேதக் காலத்திலிருந்தே இந்தோ ஆரிய மொழி கடன் பெற்றுள்ள ஏறத்தாழ 10 மொழியியற் கூறுகளையும் பட்டியலிட்டுள்ளார்" (-பக்- 20)

பிரபல வரலாற்று நூலாசிரியர் வின்செண் ஸ்மித் தனது 'The oxtord History of India ' என்ற நூலில். பார்ப்பனர்கள் இங்கே நுழைந்ததைப் பற்றிக் குறிப்பிடும் போது,"திராவிட மதமும் அவர்களது சமூகப் பழக்க வழக்கங்களும் வடஇந்தியாவில் இருந்ததைப் போல அல்லாமல் முற்றிலும் மாறுபட்டிருந்தன. சாதி என்பது அவர்களுக் குத் தெரியாத ஒன்றாக இருந்தது"

(The Dravidian religion and social Customs differed widely From those of northen India caste was unknown ) என்று குறிப்பிடுகிறார். ( The oxford History of India - Third Edition 1958 p- 42- 43)

ஆரியப் பார்ப்பனர் இந்தியாவிற்குள் நுழையும் முன்பே இந்தியா முழுவதும் பரவி இருந்தவர்கள் திராவிடர்கள்.' (There is goood ground then, for supposing that before the coming of the Indo-Aryans, speakers of the Dravidian Languages predominated both in

Northern and in Southern India' - Prof- E.J. Rapson- Cambridge history of India- vol-1) என்கிறார் பேராசிரியர் நு.து ராப்சன்.

மேலை நாட்டு ஆராய்ச்சியாளர்களை யாராவது ஆதாரம் காட்ட முடியுமா? என்று தோழர் மணியரசன் கேட்டிருந்தார். மேலே கண்ட ஆதாரங்கள் அனைத்துமே மேலை நாட்டு ஆராய்ச்சி யாளர்களின் ஆய்வுதான்.

அதே நூலின் பிறிதொரு இடத்தில்(பக்-35) தோழர் மணியரசன் ஆரியப் பார்ப்பனர்கள் உருவாக்கி ஐரோப்பியர் களும் ஏற்றுக்கொண்டு தமிழர்களை திராவிடர் என்றே அழைத்தனர். ஆகவே, திராவிடம், திராவிடர் என்பது ஆரியரும் அயல் இனத்தாரும் சுமத்திய போலிப் பெயர்கள் என்றும் சொல்கிறார். பார்ப் பனர்களின் நூல்களில் உள்ள கருத்தை ஏற்றுக்கொள்ளமாட்டேன். மேலை நாட்டு ஆராய்ச்சியாளர் களின் ஆய்வை ஆதாரம் காட்ட முடியுமா? என்றார். பிறகு அதையும் மறுக்கிறார் தோழர் மணியரசன். வேறு என்ன ஆதாரம் தான் கேட்கிறார் என்பதையும் தெளிவாகக் குறிப்பிடவில்லை. ஆக, திராவிடம், திராவிடர் என்றாலே அவருக்கு எட்டிக்காயாக கசக்கிறது. பாவாணர் கருத்துக் களை அவருக்குத் தேவையான அளவில் உருவி எடுத்துப் போட்டு தனக்கு பலம் சேர்க்கிறார்.

அதனால், பாவாணர் சொன்ன, ஆய்ந்து தெளிந்த கருத்துக் களையும் அவர் பார்வைக்கு வைப்போம். பாவாணருடைய ஆய்வை அவர் எந்த அளவிற்கு சிதைத்து, பொய்யான கருத்தை உருவாக்கி இருக்கிறார் என்கின்ற மோசடியையும் அதன் மூலம் நிரூபிப்போம்.

1. மொழி நூலானது உலக மொழிகள் எல்லாவற்றையும் தழுவும் ஒரு பொதுக்கலை. உலக மொழிகள் எல்லாவற்றையும் ஆரியம்

(Aryan) சேமியம் (Semitic) துரேனியம் (Turanian) என்னும் முப்பெருங்குலங்களாகப் பிரித்துள்ளார் மாக்கசு முல்லர். அவற்றுள், துரேனியத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படும் திராவிடக் குடும்பத்தின் மொழிகளைத் திறம்பட வகுத்துக் காட்டியவர் கால்டுவெல். இங்ஙனமே பிறரும் பிற குடும்பங்களை வகுத்துக் காட்டிள்ளனர். மேற்கூறிய முக்குலங்கட்கும் உள்ள தொடர்பை ஆராய்வதே இந்நூலின் நோக்கம். அவற்றுக்கொரு தொடர்புண் டென்று, அஃதாவது அம் மூன்றும் ஒரு மூலத்தினின்றும் கவைத் திருக்க வேண்டுமென்று சென்ற நூற்றாண்டிலேயே மாக்கசு முல்லர் (Max Muller) திட்டமாய்க் கூறிவிட்டார். அம்



மூலத்திற்குத் திராவிடம் மிக நெருங்கியதென்று கால்டுவெல் கூறியுள்ளனர். 'இக்கூற்றை என்னா லியன்றவரை முயன்று மெய்ப்பித் திருக்கிறேன்.' (தன்னுடைய ஒப்பியன் மொழி நூல் முகவுரையில் பாவாணர்)

2. "தமிழ்நாட்டின் வடபாகத்தில் லப்பையென்றும் கீழ் பாகத்தில் மரைக்காயர் என்றும், தென்பாகத்தில் ராவுத்தர் என்றும், மலையாளத்தில் மாப்பிள்ளை என்றும் நால் வகையாகச் சொல்லப் படும் முகமதியரெல்லாம் தோற்றத்தால் வேறுபட்டுக் காணினும் பிறப்பால் தமிழ்நாட்டுக் கிறிஸ்துவரைப் போலத் தமிழர் அல்லது திராவிடரேயாவர்"

(பாவாணரின் ஒப்பியன் மொழிநூல் -1-பக் 2,3;)

3. "வடமொழிக்குத் தமிழ் நூல்களில் ஆரியம் என்னும் பெயரும் வழங்குகின்றது. இப் பெயரொன்றே பார்ப்பனரைத் திராவிடரின்றுவேறான ஆரியராகக் கொள்ளப் போதிய சான்றாகும்."

(மேற்கண்ட நூல்- பக்- 7)

4. இக்கால மொழியியலும் அரசியலும் பற்றித் தமிழும் அதனினின்று திரந்த திரவிடமும் வேறு பிரிந்து நிற்பினும் பழங்காலத்தில் திரவிடம் என்றதெல்லாம் தமிழே. திராவிடம் என்று திரிந்தது தமிழ் என்னும் சொல்லே. தமிழ்- தமிழம்- த்ரமிள- திரமிட- திரவிட- த்ராவிட- திராவிடம்.

(மேற்கண்ட நூல்- பக்- 15)

5. "ஆரிய தமிழ (திராவிட)ப் போர். ஆரியர் இந்தியாவில் கால் வைத்த நாள் முதலாய் நடந்து வருவது, சரித்திரத்தால் அறியப்படும். ஆரிய மறைகளும் அதற்குச் சான்றாகும். பிராமண மதத்திற்கு மாறாகப் பௌத்த மதத்தைத் தோற்றுவித்த புத்தர், வட நாட்டிலிருந்த ஒரு திராவிட வகுப்பாரே. பிரிவினையென்னும் படையால் திராவிடரைக் கொண்டே திராவிடரை வென்று வட நாட்டை ஆரியர் கைப்பற்றும் வரையும் போர் நடந்து கொண்டே இருந்தது".

(மேற்கண்ட நூல்- பக்- 61,62)

6. "செங்குட்டுவ கனகவிசயப் போர் பதினெண் நாழிகையும், பாரதப் போர் பதினெண் நாளும், இராம இராவணப்போர் பதினெண் மாதமும், தேவ அசுரப்போர் பதினெண் ஆண்டும் நடந்த தாகச் சொல்லப்படும். ஆயின். ஆரிய

*தமிழப் போரோ பதினெண் நூற்றாண் டாக நடந்து வருகின்றது. ஆய்ந்து நோக்கின் தேவ அசுரப் போர் என்பது ஆரிய திராவிடப் போரே. சேர நாட்டுச் செங்கோல் வேந்தனும் மாபெருங் கொற்றவனுமாகிய மாவலி அசுரனென்றும் பிராமணர் பூசுரர் (நிலத்தோர்) என்றும் கூறப்படுதல் காண்க. தமிழ்ச் சித்தர் இலக்கியத் தொண்டும். நயமைக் கட்சியின் (*Justice Party*) அரசியல் தொண்டும் ஆரிய திராவிடப் போராட்டமே.''*

*(மேற்கண்ட நூல்- பக்- 62)*

*7. ''திராவிடக் குடும்பத்தில் தமிழ் மூலமொழி. தெலுங்கு, கன்னடம் (கருநடம்) மலையாளம் முதலியவை தமிழுக்குக் கிளை மொழியும், தம்முள் ஒன்றோடொன்று உடன் மொழியுமாகும். நீல மலையிலுள்ள படகம் (படகர்மொழி) கன்னடத்தின் கிளை மொழி''-*

*(மேற்கண்ட நூல்- பக்- 80)*

*8. ''திராவிடம் வடமொழிச் சார்பற்றதென்றும், உலக முதன்மொழிக்கு மிக நெருங்கிய தென்றும், வட சொல்லென மயங்கும் பல சொற்கள் தென் சொற்களேயென்றும், வடமொழியில் பல தமிழ்ச் சொற்கள் கலந்துள்ளன வென்றும்'', முதன் முதல் எடுத்துக் காட்டி, மொழிநூற்சான்றுகளால் நிறுவியவர் கால்டுவெல் (*Cald well*) கண்காணியரே...............*

*திராவிடம் வடமொழிச் சார்பற்றது. வட மொழியில் பல திராவிடச் சொற்களுள்ளன என்னுங் கொள்கைகளில் இவருடன் ஒன்றுபட்டவர், இவர் தமிழைச் சிறப்பாயாராய்ந்தது போன்றே மலையாள மொழியைச் சிறப்பாயாராய்ந்தவர் டாக்டர் குண்டட் (*Gundert*) ஆவர். இவ்விருவர்க்கும். திராவிடவவுலகம், விதப் பாய்த் தமிழுலகம் பட்டுள்ள கடன் மாரிக்குப் பட்டுள்ளதே யெனினும் பொருந்தும்.*

*(மேற்கண்ட நூல்- பக்- 83, 84)*

*9.'' பண்டைத் தமிழகம் (*The Original Home of the Dravidian Race*) குமரிநாடே என்று யான் எழுதிய நூலை 1938 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் எனக்குக் கீழ்கலைத் திறவோன் பட்டத்திற்கு (*M.O.L .Degree*) இடு நூலாக (*Thesis*) சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு விடுத்தேன்''.*

*(மேற் கண்ட நூலில் பாவாணர் குறிப்பு- பக்- 116)*

*10.''திராவிடம் தெற்கிற் சிறத்தல்''*

*1- தமிழ் திராவிடத்தின் சிறந்த வடிவமாதல்.''*

*(மேற்கண்ட நூலில் துணைத் தலைப்பு- பக்- 136)*

*11.''திராவிடம் என்னுஞ் சொன்மூலம்''*

*பழைய காலத்தில் நாட்டுப் பெயர்களும் மொழிப் பெயர் களும் பெரும்பாலும் 'அம்' ஈறு பெற்றுத் தமிழில் வழங்கின.*

*கா: ஈழம், கடாரம், சீனம், யவனம்.*

*தமிழம் - த்ரமிள (ம்)- த்ரமிட(ம்)- த்ரவிட(ம்)- த்ராவிட(ம்) என்னும் முறையில், தமிழம் என்னும் சொல்லே திராவிடம் என்று திரிந்ததாகும்.''*

*(பாவாணரின் ஒப்பியன் மொழிநூல் -2 -பக் -28)*

*12.திராவிட மொழிகள் எல்லாவற்றிற்கும், தமிழம் என்னும் பெயரே பொதுப் பெயராக முதலாவது வழங்கி வந்தது. த்ராவிடம் என்னும் வடிவும், தமிழம் என்னும் பொருளிலேயே, முதன் முதல் வழங்கியதாகும். தெலுங்கு தமிழினின்றும் பிரிந்து போன பின்பு, முன்பு ஒன்றாயெண்ணப்பட்ட திராவிடமொழி இரண்டாய்க் கருதப்பட்டு, ஆந்திர திராவிட பாஷா என்னும் இணைப் பெயராற் குறிக்கப்பட்டது. அதன்பின், கன்னடம், மலையாளம் முதலிய மொழிகள் பிரிந்து திராவிடம் பல்கிய பின், தமிழம் என்னும் பெயரின் மறு வடிவமான தமிழ் திராவிடம் என்னும் சொற்களுள் முன்னது தமிழ் மொழிக்கும் பின்னது திராவிட மொழிகள் எல்லாவற்றுக்குமாக வரையறுக்கப் பட்டன.*

*(மேற்கண்ட நூல் - பக் -28.29)*

*13 ''மான்குமேர், முண்டா. திராவிடம் என்றும் முக்குடும்ப மொழிகளும் பின் வருபவற்றில் ஒத்திருக்கின்றன''.*

*(மேற்கண்ட நூல் -பக் -74)*

*14. உடலமைப்புப் பற்றிய மாந்தன் நிலைகளுள், முதலாவது விலங்கு போன்றது இரண்டாவது பண்டை நீக்கிரோவரது. மூன்றாவது திராவிடரது. நாலாவது ஆரியரது. தமிழர் உடல மைப்பில் ஒரு வலத்த கருநீசிய (*Melanesian*)அல்லது இந்தோ- ஆப்பிரிக்கக் கூறுள்ளதாகப் பண்டிதர் லோகன் (*Dr.LOGAN*) கூறுகின்றார்.*

*மாந்தன் நிலைகள், தொழிற்படி முறையே உண்ணும் மாந்தன் (*MAN OF EATER*) உழைக்கும் மாந்தன் (*MAN OF WORKER*) எண்ணும் மாந்தன் (*MAN OF THINKER*) புதுப்புனை மாந்தன் (*MAN OF*

INVENTOR) என நான்கு, அவற்றுள் இடை மூன்றும் திராவிடர் அடைந்தவை. இறுதியது ஆரிய ரது. மாந்தனை நிறம் பற்றிக் கால முறைப்படி முறையே கரு மாந்தன். செங்கருமாந்தன், செம்மாந்தன், பொன்மாந்தன், வெண்மாந்தன் என ஐவகையாக வகுக்கலாம். அவற்றுள் முதல் மூன்று நிறங்கள் திராவிட ருடையன.

மாந்தன் மூக்கு முதலிலிருந்து வர வர ஒடுங்கி வந்திருக்கின்றது. நீக்கிரோவர் மூக்கு அகன்றும் திராவிடரது நடு நிகர்த்தாயும், ஆரியரது ஒடுங்கியுமிருக்கும். சரியான திராவிடனுடைய மூக்கின் நீளத்திற்கும் அகலத்திற்கும் உள்ள விழுக்காட்டளவு (PROPORTION) நீக்கிரோவின் மூக்கிற்குள்ளது போன்றேயிருக்கிறது. இந்தியாவிற்கு வெளியே திராவிட வரணமில்லை. திராவிடரின் முகம் (தலை) வழக்கமாக வால வடி வாயுளது. ஆனால் பிற இயல்புகளிலெல்லாம் அது ஆரியத்திற்கு நேர் மாறாயுள்ளது என்று கிரையர்சன் வரைகின்றார்.

(மேற்கண்ட நூல்- 77)

15."தமிழிலக்கியம் திராவிட மொழிகட்கெல்லாம் பொதுச் செல்வம். ஆயினும் ஆரியத்தால் மயங்கிய பிற திராவிட மொழிகள் தமிழ்த்தொடர்பை முற்றிலும் விட்டு விட்டன."

(-மேற்கண்ட நூல்- பக்- 157)

16."தமிழ் என்னும் சொல் திரவிடம் என்று திரிந்தது போன்றே, தமிழம் என்னும் மொழியும் பல திராவிட மொழி களாகத் திரிந்தருப் பதனால் திரவிடம் என்னும் சொல்லால் திரவிட மொழிகளைக் குறிப்பது தக்கதே".

(பாவாணரின் தமிழ் வரலாறு- 2 பக்- 29)

17."தமிழ் மொழியின் சிறப்புப் பெயர். தமிழ் (தமிழம்) திரவிடம் என்னும் இருவடிவில் காணப்படுகின்றது. இவ்விரண் டும் வெவ்வேறு சொற்போல் தோன்றினும் உண்மையில் ஒரே சொல்லின் இரு வேறு வடிவங்களாகும். இவற்றுள் முன்னையது தமிழ் என்பதே".

- (மேற்கண்ட நூல்- 30)

18."ஆரியர்க்கு, பழங்குடி மக்களாகிய திரவிடரை அடிப்படுத்தி என்றும் தாம் உயர்வாயிருக்க வேண்டுமென்று பெருவிருப்பமிருந்தமையாலும், திராவிடர் தென்னாட்டில் நாகரிகத்திலும் பண்பாட்டிலும், கல்வியிலும்,செல்வத்திலும்........."

(மேற்கண்ட நூல்- பக்- 102)



19."வேத வொழுக்கத்தைக் கைக் கொள்ளாமையால் விலக்கப்பட்ட சத்திரிய வகுப்புகளுள் ஒன்றாக, திரவிட இனத் தைக் குறித்துள் ளார் மனுதரும நூலாசிரியர்".

(மேற்கண்ட நூல்- பக்- 113)

20."எனது ஒப்பியன் மொழி நூலின் முதன் மடல் 3 ஆம் பாகத் தின் பிற்பகுதியாய் வெளிவரும் இந்நூல் தமிழே திரவிடத் தாய் என்று நாட்டவெழுந்தது".

(திராவிடத்தாய் என்னும் தனது நூலின் முகவுரையில் பாவாணர்)

21."உலகில் இது போது திரவிடமிருப்பது இந்தியாவே. இந்தியாவிலும் திரவிடத்திற்குச் சிறந்தது தென்னாடே, தென்னாட் டிலும் சிறந்தது தமிழ் நாடே"

(- திராவிடத்தாய்- பாவாணர்- பக்- 4,5)

22. திரவிடத்திற்கு ஆரியக் கலப்பால் வந்த கேடு.

1. தாய்மொழிக்கும் சேய் மொழிக்கும் தொடர்பு அறவு.

2.திராவிட மொழிப் பிரிவினையும் மக்கட் பிரிவினையும்.

3. திரவிட வொலித் திரிபும் சொற்றிரிபும்

4. திரவிடச் சொல் வழக்கொழிவும் மறைவும்.

5. சரித்திர மறைப்பும் மலைவும்.

6. புதுச் சொல்லாக்கத் தடை.

7. திராவிடர்க்குத் தாய்மொழியுணர்ச்சியின்மை.

8. திரவிடக்கலை வளர்ச்சியின்மை

9. திரவிட மொழி மறைவு.

10.சொல் வழி ஐயப்பாடு.(அதாவது சில சொற்கள் ஆரிய மா, திரவிடமா என்று ஐயுறப்படுதல்)

(மேற்கண்ட நூல்- பக்- 19)

23."ஆரியக் கலப்பினாலேயே மாபெருந்திரவிடநாடு சீர் குலைந்து சின்னாபின்னமாய்ச் சிதைந்து கிடக்கின்ற தென்க".

(மேற்கண்ட நூல்- பக்- 21)

24.“மலையாள நாட்டில் பார்ப்பனரொழிந்த மற்றக் குலத் தாரெல்லாம் தமிழர் அல்லது திரவிடரே”.

(-மேற்கண்ட நூல்- பக்- 33)

25.“ திரவிட நாகரிகத்தை ஆரியமாகக் காட்டுவதற்கு, பொருட் டொகைகளைப் பெருக்குவதும் பதுச் சொற்களைப் புணர்ப்பதும் ஆரியர் வழக்கமாகும்”.

(பாவாணரின் தமிழர் மதம்- நூல்- பக்- 103,104)

26.“திரவிடத்திற் போன்றே ஆரியத்திலும், சுட்டுச் சொற்கள் அ.இ.உ. என்னும் முத்தமிழ்ச் சுட்டெழுத்துக்களையே மூலமாகக் கொண்டன.”

(மேற்கண்ட நூல்- பக்- 248)

27.“தென்னாட்டிற்கு வந்த ஆரிய வகுப்பார் பூசாரியரே ஆதலால், தமிழரும் திராவிடருமான தென்னாட்டு அல்லது தென் னிந்திய மக்களெல்லாம் ஆரியக் கலப்பற்ற தூய பழங்குடி யினத்தாரே ”

(தமிழர் வரலாறு நூலில் பாவாணர்- பக்- 174)

28.“இவ்விருபதாம் நூற்றாண்டிலும் ஆங்கிலராட்சியும் ஆங்கிலக் கல்வியும் ஏற்பட்ட பின்பும். பேராயக் கட்சித் (Congress) தலைவரான பிராமணர், அறியாமையும் தன்னலமுங்கொண்ட தமிழரைக் கொண்டே, தமிழரையும் திரவிடரையும் முன்னேற்றி நயன்மைக்கட்சித் (Justice Party) தலைவரைத் தோற்கடித்திருப் பதையும், திருக்கோவில் தமிழ் வழிபாட்டைத் தடுப்பதையும் நோக்குக.”

(தமிழர் வரலாறு’ நூலில் பாவாணர்- பக்- 177)

29.“சிந்துவெளி வழியாகவே தமிழர் அல்லது திரவிடர் மேலை யாசியாவிற்கும் அதன்பின் ஐரோப்பாவிற்கும் சென்றி ருப்பராதலாலும், சிந்து என்னும் ஆற்றுப்பெயர் தமிழர் இட்ட தமிழ்ப் பெயராகவே யிருக்கலாம்”.

(தமிழர் வரலாறு நூலில் பாவாணர்- பக்- 195)

பாவாணர் கூற்றுகளின் மூலம் தோழர் மணியரசனின் பிதற்றல்களுக்கு விடை கண்டோம். பாவாணர் கண்டறிந்த ஆய்வு முடிவுகளின் சுருக்கம் இதோ.



1. உலகமொழிகளுக்கு மூலம் ஒன்றுண்டு அம்மூலம் திராவிடத்திற்கு நெருங்கியது என்பதை என்னால் இயன்ற வரை மெய்பித்திருக்கிறேன். தமிழே திராவிடத்தாய்.

2. தமிழம் என்னும் சொல்லே திராவிடம் என்று திரிந்ததாகும.;

3. திராவிடக் குடும்பத்தில் தமிழ் மூலமொழி. திராவிடம் வடமொழிச் சார்பற்றது என்றும் வடமொழி யில் பல தமிழ்ச் சொற்கள் கலந்துள்ளன என்றும் எடுத்துக் காட்டிய கால்டுவெல், டாக்டர் குண்டட் ஆகியோருக்கு திராவிடவுலகம் குறிப்பாய்த் தமிழ் உலகம் கடன்பட்டுள் ளது.

4. தற்போது தமிழும் - திராவிடமும் பிரிந்து நின்றாலும் பழங்காலத்தில் திராவிடம் என்றதெல்லாம் தமிழே. திராவிடம் என்று திரிந்தது தமிழ் என்னும் சொல்லே.

5. தமிழ்மொழி தமிழ் திராவிடம் என்னும் இருவடிவில் காணப்படுகிறது. இவ்விரண்டும் வெவ்வேறு சொற்போல் தோன்றினும் உண்மையில் ஒரே சொல்லின் இரு வேறு வடிவங்களாகும்.

6. ஆரியர் இந்தியாவில் கால் வைத்த நாள் முதலாய் ஆரிய திராவிடப் போர் நடந்து வருகிறது. தேவ அசுரப் போர் என்பது ஆரிய திராவிடப் போரே. சித்தர்களின் இலக்கியத் தொண்டும் நீதிக்கட்சியின் அரசியல் தொண்டும் ஆரிய திராவிடப் போராட் டமே.

7. திராவிடர் தென்னாட்டில் நாகரிகத்திலும் பண் பாட்டிலும் கல்வியிலும் செல்வத்திலும் சிறந்திருந் தனர்.

8. ஆரியக் கலப்பினால் மாபெருந் திராவிட நாடு சீர் குலைந்து சின்னாபின்னாமாய்ச் சிதைந்து கிடக்கிறது.

9. உலகில் இப்போது திராவிடமிருப்பது இந்தியா வில், இந்தியாவிலும் திராவிடத்திற்குச் சிறந்தது தென்னா டே. தென்னாட்டிலும் சிறந்தது தமிழ் நாடே.

10. புத்தர் வடநாட்டிலிருந்த திராவிடரே. மலையாள நாட்டில் பார்ப்பனர் அல்லாத மற்ற குலத்தாரெல்லாம் தமிழர் அல்லது திராவிடரே.

என்று கூறும் பாவாணர். தமிழர் அல்லது திராவிடர் என்றே பல இடங்களில் குறிப்பிடுகின்றார்.

பாவாணர் கூறியதில், திராவிடம் என்பதில் தமிழரும் வரமாட் டார் தமிழும் வராது.- என்று தோழர் மணியரசன் எழுதி இருப்பது வடி கட்டிய இட்டுக் கட்டிய பொய்க்கதை என்பதை பாவாணரின் கூற்றுக்களின் மூலமே மெய்ப்பித்து இருக்கிறோம்.

திராவிடம், திராவிடர், திராவிட நாடு என்பதற்கான அசைக்க முடியாத ஆதாரங்களை பல்வேறு ஆய்வுகளின் மூலம் ஆய்ந்து தெளிந்த பாவாணரை- இவற்றுக்கு மாறுபட்ட கருத்து கொண்டவர் என்று காட்டி இருக்கின்றார் தோழர் மணியரசன். தன் நிலைப்பாட்டிற்கு ஆதரவாக பாவாணர் இருக்கிறார் என்பதைக் காட்ட பாவாணரைக் கொச்சைப் படுத்துகின்ற மாபெரும் குற்றத் தைச் செய்திருக்கிறார். சுய நலத்திற்காக தன் தரப்பை நியாயப் படுத்துவதற்காக எந்தவிதமான பாதகச் செயலையும் செய்யத் தயங்கமாட்டார் தோழர் மணியரசன் என்பது இதன் மூலம் வெட்ட வெளிச்சமாகிறது.

"தமிழர்களின் சூத்திரப் பட்டமும், பஞ்சமர் பட்டமும் ஒழிய பெரியாரே முதற்பெரும் காரண கர்த்தர். தந்தை பெரியார் தமிழ்நாட்டில்பார்ப்பனியத்தோடு மோதி ஈட்டித் தந்த வெற்றிகளையும் குறைத்து மதிப்பிட்டு விடக்கூடாது. இருபதாம் நூற்றாண்டில் தமிழர்களுக்குத் தந்தை பெரியார் ஆற்றிய தொண்டுக்கு ஈடாக வேறு யார் தொண்டையும் வைக்க முடியாது. அந்த வகையில் தமிழ்ச்சமூகம் தந்தை பெரியாருக்கு என்றென்றும் கடன்பட்டிருக்கிறது. நன்றி கொன்ற இனமாக ஒரு நாளும் தமிழ் இனம் மாறாது".

என்று ஆங்காங்கே தந்தை பெரியாரை பாராட்டுவதாகக் காட்டிக்கொண்டு, அதாவது தந்தை பெரியாரை கடுமையாகக் கொச் சைப்படுத்தி எழுதத் தயாராவதற்கு முன்பு அவரைப் பாராட் டுவது போல ஒரு சில வரிகளை எழுதி விட்டு பெரியாரை விமர்சித் திருக்கிறார்.

மேலும், "ஆய்வு என்று வந்து விட்டால் ஆசான்களும் திறனாய் வுக்கு உட்பட்டவர்களே" என்கிறார்.

பெரியார் என்பவர் விமர்சனத்திற்கு, திறனாய்வுக்கு அப்பாற்பட்டவர் அல்ல. இதிலே எங்களுக்கு எந்த மாறுபாடும் கிடையாது. ஏனென்றால், எதையும் ஏன், எதற்கு என்று ஆய்வுப் பூர்வமாக கேள்வி எழுப்பி உண்மையை அறிந்து வாழ தமிழர் களுக்கு வழி காட்டிய சிந்தனையாளர் பெரியார் தானே!

தோழர் மணியரசன் பெரியாரை திறனாய்வு செய்யட்டும், ஆனால், அதில் நேர்மை இருக்க வேண்டும். நியாயம் இருக்க



வேண்டும் உண்மை இருக்க வேண்டும். மாறாக, ஆத்திரம், வெறி, காழ்ப்புணர்ச்சி பொறாமை, இயலாமை இருக்கக் கூடாது. கிராமப் புறத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். 'ஆத்திரத்தில் கையை விட்டால் அண்டாவுக்குள்ளேயே நுழையாது' என்று. அது போலத் தான் தோழர் மணியரசனின் ஆய்வு இருக்கிறது. அவர் எழுதிய நூலின் ஒவ்வொரு பக்கமும் ஒரு புளுகு மூட்டை தான். ஆய்வு என்றால் விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டு உண்மையை மட்டுமே எழுத வேண்டும். அதை விடுத்து தனக்கு தேவையான கருத்தை உண்மையாக - வரலாறாக மாற்றக் கூடாது எழுதக் கூடாது. ஆனால் தோழர் மணியரசன் அதைத் தான் தன் நூலில் செய்துள்ளார்.

பாவாணரை அணுகிய நோக்கிலேயே தந்தை பெரியாரை யும் அணுகி, தன்னுடைய எண்ணத்திற்கேற்ப மேற் கோள்களை எடுத்துக்காட்டி தனக்குத் தானே முதுகில் தட்டி பாராட்டிக் கொண்டுள்ளார். தந்தை பெரியாரின் சிந்தனைகள் அனைத்தையும் ஆய்வு செய்யாமல் ஆத்திரத்தில் தோழர் மணியரசன் உளறிக் கொட்டியவைகளைப் பார்ப்போம்.

1. வரலாற்று உண்மை என்ன என்பதை விடவும் சமுதாய நன்மை எது என்று கருதி திராவிடர் என்ற இனக் கொள்கை யைத் தந்தை பெரியார் தேர்வு செய்துள்ளார்.

2. திராவிடர், தமிழர் என்று பெரியார் பேசியவை வரலாற்று ஆய்வுக்கோ மானிட இயல் ஆய்வுக்கோ, தேசிய இன ஆய்வுக்கோ பொருந்தாதவை.

3. திராவிடர் என்ற இனம் இருந்ததற்கான ஆதாரங் களை பெரியார் எடுத்துக் காட்டவில்லை. பெரியார் காட்டு பவை அனைத்தும் ஆரியரின் நூல்களே மகாபாரதம், இராமாயணம், மனுஸ்மிருதி போன்றவையே.

4. பெரியாரைப் பொறுத்த வரையில் திராவிடர் என்ற சொல், அன்றைய நிலையில் பார்ப்பனிய ஆதிக்கத்தை எதிர்ப்போரை ஒன்று திரட்டப் பயன்பட்ட ஓர் அடை யாளக்குறி மட்டுமே. அதற்கு மேல் அச் சொல்லில் அவர்க்கு ஈடுபாடோ ஆராய்ச்சியோ கிடையாது.

5. தமிழ்நாடே திராவிடநாடு என்றும் அதற்கு ஆதாரங்கள் நிறைய இருக்கின்றன என்றும் பெரியார் சொல்கிறார், அப்படிப்பட்ட ஆதாரம் ஒன்றைக் கூட அவர் சொல்லாமல் விட்டது தான் நமக்குள்ள சிக்கல்.

6. பொது இலட்சியக் குறிச்சொல்லாக ஒருநேரம் 'தமிழர் ஒற்றுமை' என்கிறார் இன்னொரு நேரம் 'திராவிடர் ஒற்றுமை' என்கிறார். திராவிடம் என்றால் தமிழ். தமிழ் என்றால் திராவிடம் என்றும் இணைத்துப் பேசுகிறார்.

திராவிடம், திராவிடர் என்ற கருத்தியல் பற்றிய தோழர் மணியரசனின் விமர்சனங்களுக்கு தந்தை பெரியாரின் விளக்கத்தை காண்போம்.

"ராமாயணக் கதை என்பது ஆரியர்கள் தென் இந்திய தஸ்யூக்கள் அல்லது திராவிடர்கள் மீது படையெடுத்து வெற்றி பெற்றதைச் சித்திரித்துக் காட்டுவதாகும்." இது பி.சிதம்பரம் பிள்ளை எழுதிய "திராவிடரும் ஆரியரும்" என்னும் பத்தகத்தின் 24-ஆவது பக்கத்தில் இருக்கிறது.

(திராவிடர்- ஆரியர் உண்மை நூலில் பெரியார்-ப்-7,8)

"தமிழர்கள் என்பவர்கள் இந்தியாவின் தென்கிழக்கிலும் இலங்கையின் சில பாகத்திலும் வசிக்கும் ஆரியரல்லாத திராவிட மக்கள் ஆவார்கள். தமிழ் என்பது மேற்படியார்களால் பேசும் பாஷை"-இது சர்.ஜேம்ஸ்மர்ரே எழுதிய புதிய இங்கிலீஷ் அகாரதியின் பக்கம் 67 டி யில் இருக்கிறது.

(மேற்படி நூல்- பக்- 9.)

"திராவிடர்களை ஆரியர்கள் வென்று விட்ட அகங்காரத்தால் குரங்குகள் என்றும் கரடிகள் என்றும் ராட்சதர்கள் என்றும் எழுதி வைத்தார்கள்.; ஆனால்,இந்தப்படி இழிவுபடுத்தப்பட்ட வகுப்பாரிடமிருந்தே (திராவிடர்களிடமிருந்தே) பல நாகரீகங்களை இந்தப் பிராமணர்கள் கற்றுக்கொண்டார்கள்".

இது ஷோஷி சந்தர்டட் எழுதிய "இந்தியா அன்றும் இன்றும்" என்னும் புத்தகத்தின் 15-ஆவது பக்கத்தில் இருக்கிறது.

(மேற்படி நூல்- பக்- 10)

"ஆரியர்கள் தங்களால் தோற்கடிக்கப்பட்ட எதிரிகளாகிய திராவிடர்களைத் தங்களுடைய புத்தகங்களில் திராவிடர்கள் தஸ்யூக்கள் என்றும், தானவர்கள் என்றும் ராட்சதர்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்."

ஆரியக்கவிகள் திராவிடர்கள் மீது கொண்டிருந்த வெறுப்பை இது காட்டுகிறது. ஏனெனில், ஆரியர்கள் திராவிட நாட்டில் சிறுகச் சிறுக நுழைந்து ஆதிக்கம் பெறுவதில் அடைந்த கஷ்டத்தினால் இப்படி எழுதினார்கள்.



இது சி.எஸ். சீனிவாச்சாரி எம்.ஏ., எம்.எஸ், ராமசாமி அய்யங் கார் எம்.ஏ. ஆகிய சரித்திர போதகர்கள் எழுதிய "இந்திய சரித்திரம் முதல் பாகம்" என்னும் புத்தகத்தில் "இந்து இந்தியா" என்னும் தலைப்பில் 16,17 ஆவது பக்கங்களில் இருக்கிறது.

(மேற்படி நூல்- பக்- 11)

"ஆரியர்களில் சமஸ்கிருதம் பேசியவர்கள் மட்டும் இந்தியாவின் மேற்குக் கணவாய் வழியாக நுழைந்து வட இந்தியாவை அடைந்தார்கள். அங்கு தங்களைவிட முன்னேற்றமான திராவிடர்களைக்கண்டு அவர்களிடமிருந்து பல நாகரீகங்களைக் கற்றுக் கொண்டார்கள்.

இது எச்.ஜி.வெல்ஸ் எழுதிய "உலகத்தின் சிறுசரித்திரம்" என்னும் புத்தகத்தின் 105-ஆவது பக்கத்தில் இருக்கிறது.

(மேற்படி நூல்- பக்- 11)

"பாரத ராமாயணங்கள் முதலிய இதிகாசங்களில் காட்டுமிராண்டிகளும் அசுரர்களும், ராட்சதர்களும், தஸ்யூக்களும் வசிக்கும் நெருக்கமான காடுகள் கொண்டநாடு என்று குறிப்பிடப்பட்டிருப்பதெல்லாம் தென்னிந்தியாவைப் (திராவிடநாட்டை) பற்றியேயாகும்."

இது ஜி.எச்.ராபின்சன் சி.அய்.ஈ.யால் எழுதின 'இந்தியா' என்னும் புத்தகத்தின் 155-ஆவது பக்கத்தில் இருக்கிறது.

(மேற்படி நூல்- பக்- 13)

"வடஇந்தியாவில் இருந்த திராவிடக் கலை, நாகரீகம் முதலியவை யாவும் ஆரியர்களால் அழிக்கப்பட்டு விட்டன. ஆனால், தென் னிந்தியாவில் அவ்விதம் நடக்கவில்லை."

இது தமிழ்ப்பேராசிரியர் கே.என்.சிவவராஜபிள்ளை பி.ஏ. எழுதிய பண்டைத் தமிழர்களின் வரலாறு" என்னும் புத்தகத்தின் 4-ஆம் பக்கத்தில் இருக்கிறது.

(மேற்படி நூல்- பக்- 13)

"500 அல்லது 600 ஆண்டுகளுக்கு முற்பட்ட சரித்திரங்களிலெல்லாம் நம்மைக் குறித்து 'திராவிடர்' என்றே எழுதப்பட்டிருக்கிறது. திராவிடர், ஆரியர் என்ற இனங்களே ஆதியில் இந்தியாவில் இருந்தன என்பதாக சரித்திரச் சான்றுகள் கூறுகின்றன. தென் பாகத்தில் திராவிடர்களே பெருங்குடி மக்களாக

வாழ்ந்து வருகின்றனர்.''

(பெரியார் ;ஈ.வெ.ரா. சிந்தனைகள்-1-பக்-543)

"திராவிடம்'' என்பது நமது நாட்டினுடைய பெயராகும். 'திராவிடர்' என்பது இந்நாடடின் பழங்குடி இனத்துக்கு ஏற்பட்ட உலகப்பெயராகும். திராவிடர் என்பதை நம்மில் சிலர் மறுக்கிறார் கள், வெறுக்கிறார்கள். திராவிடர் என்பது என்ன, நாம் கற்பித்த ஒரு பெயரா? இது இன்று நேற்று ஏற்பட்டதல்லவே! ஆரியர் என்ற பெயர் தோன்றிய அன்று ஏற்பட்ட பெயர் தானே திராவிடர் என்பது?''

(ஈ.வெ. ரா.சி-1-பக்-547)

"இந்த நாட்டைப் பொறுத்த வரையில் இதுவரைக்கும் இருந்து வரும் போராடடமெல்லாம் ஆரியர்- திராவிடர் போராட்டமே ஒழிய வடமொழி, தென்மொழிப் போராட்ட மல்லவே''

- (ஈ.வெ.ரா.சி-1-பக்-547)

"தமிழ்நாடு என்பது திராவிடநாடு என்றும், திராவிடநாடு என்பதானது இன்னது என்றும் வெகு காலமாகவே அய்ரோப்பிய அறிஞர் முதல் பல உலக ஆராய்ச்சிக்காரர்களாலும், இந்திய சரித்திர ஆராய்ச் சியாளராலும் எல்லை காட்டி வகுக்கப்பட்டி ருக்கிறது என்றும் நான் இது விஷயமாய்ப் பேசுகிற இடங்களில் எல்லாம் இதைப் பற்றி விளக் கிப் பேசியே வந்திருக்கிறேன். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலாகிய மொழிகளைத் தாய் மொழியாகப் பேசிவந்த மக்களையே மிகுதியாகக்கொண்ட நாடுகள் இன்று திராவிடம் என்று சொல்லப்படுவது யாவரும் அறிந்ததேயாகும். அந்தத் திராவிடம் என்பது பெரிதும் சென்னை மாகாணமாகவே இருக்கிறதுடன் மற்றும் சிறிது சென்னை மாகாணத்தைத் தொட்ட சுற்றுப்புறநாடாகவும் இருக்கிறது

இந்த விஸ்தீரணத்திற்குட்பட்ட முஸ்லீம்களும் கிறிஸ்துவர் களும். தாழ்த்தப்பட்ட மக்களும், தங்களை ஆரியர் என்று சொல்லிக் கொள்ளும் பாரப்பனர் அல்லாத மற்ற இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களும் ஆகிய எல்லோரும் திராவிடர்கள் என்ற தலைப் பின் கீழ் வருவார்கள்''.

(பெரியார் ஈ.வெ.ரா.சி.-2-பக்-655)

"தமிழும், தமிழ்நாடும், தமிழ்மக்களும் இப்படி பிரிந்து கிடக்கிற காரணத்தால்தான் ஒற்றுமைக்குப் பாடுபடும் நாங்கள் திராவிடநாடு என்றும், திராவிட மக்கள் என்றும், திராவிட



கலாச் சாரம் என்றும் எடுத்துக் காட்டிப் புத்துணர்ச்சி ஏற்படுத்தப் பாடுபட்டு வருகிறோம்.

'தமிழ்' என்பதும் 'தமிழர் கழகம்' என்பதும் மொழிப் போராட்டத்திற்குத் தான் பயன்படுமேயொழிய இனப்போராட் டத்திற்கோ, கலாச்சாரப் போராட்டத்திற்கோ சிறிதும் பயன் படாது. சரி, ஆரியர்கள் முதலில் தம் கலாச்சாரத்தைப் புகுத்தித் தான் நம்மை வெற்றி கொண்டார்கள். நம் கலாச்சாரத்தைத் தடுத்துத்தான் நம் மீது ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தார்கள். நாமும் நம் கலாச்சாரத்தை மறந்து ஆரிய கலாச்சாரத்தை ஏற்றுக் கொண்டதால்தான் அவர்களுக்குக் கீழான மக்களாக- அவர் களுடைய வைப்பாட்டி மக்களாக சூத்திரர்களாக, பஞ்சமர்களாக ஆக்கப்பட்டோம்.

எனவே, அக் கலாச்சாரத்திலிருந்து விடுபட வேண்டு மென்றால், மொழிப் போராட்டம் ஒன்றினால் மட்டும் வெற்றி பெற்று விடமுடியாது. கலாச்சாரத்தின் பேரால்- இனத்தின் பேரால் போராட்டம் நடத்த வேண்டும். அதில் வெற்றி பெற வேண்டும். அப்போது தான் நாம் விடுதலை பெற்றவராவோம்.

மொழிப் போராட்டம், கலாச்சாரப் போராட்டத்தின் ஒரு பகுதி தானேயொழிய முழுப் போராட்டமாகவே ஆகிவிடாது. சட்டம், சாஸ்திரம், சமுதாயம், சம்பிரதாயப் பழக்கவழக்கங்கள், புராணங்கள், இதி காசங்கள் இவை எல்லாவற்றிலுமே நம் இழிவு நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, இவை எல்லாவற்றி லிருந்து மே நம் இழிவு நீக்கமடைந்தாக வேண்டும். மொழியால் மேம்பாடும் வெற்றியும் பெற்று விடுவதாலேயே நமது இழிவும், இழிவுக்கு ஆதாரமான கலாச்சாரமும் ஒழிந்து விடமாட்டா''-

(மேற்கண்ட நூல்-பக்-682-683.)

"தட்சணப் பிரதேசம் வந்தால் தமிழராகிய நமக்குத் தான் ஆபத்து. தமிழ், கன்னடம், மலையாளம் மூன்று நாடுகளும் ஒன்று சேர்ந்தால், பார்ப்பனர்களால் கழித்து விடப்பட்டு நம்மவருக்குக் கிடைத்து வரும் உத்தியோகங்களெல்லாம் மலையாளிகளின் கைக்குள் போய் விடும். நாமெல்லோரும் போலீஸ், கக்கூஸ் எடுத்தல், ரெயில்வே கூலி முதலிய வேலைகளைத் தான் செய்ய வேண்டிய நிலைமை வரும். முழு அதிகாரம் எல்லாம் வட நாட்டவருக்கும், மலையாளிகளுக்கும் பார்ப்பனர்களுக்கும் தான் போகும். மத்திய சர்க்கார் சுரண்டல் பெரிதாக உள்ளது. இப்பொழுதே நம்மை அடிமை போல் நடத்துகிறார்கள்.''

-(மேற்கண்ட நூல்-பக்-729)

“ஆந்திரா பிரிந்ததிலிருந்தே நாட்டுப் பிரிவினையில் எனக்குக் கவலை இல்லாமல் போய் விட்டது. பிறகு கன்னடமும், மலை யாளமும் (கர்நாடகமும் கேரளாவும்) பிரிவதில் இரண்டு மூன்று காரணங்களால்- இவை சீக்கிரத்தில் பிரிந்தால் தேவலாம் என்கின்ற எண்ணம் தோன்றி விட்டது. என்ன காரணம் என்றால்,

ஒன்று, கன்னடியனுக்கும், மலையாளிக்கும் இனப்பற்றோ, இனச் சுயமரியாதையோ பகுத்தறிவுணர்ச்சியோ இல்லை என்ப தாகும். எப்படியெனில், அவர்களுக்கு வருணாசிரம வெறுப்பு கிடையாது. சூத்திரன் என்பது பற்றி இழிவொ, வெட்கமோ பெரும்பாலோருக்குக் கிடையாது. அவர்கள் மத மூடநம்பிக்கை யில் ஊறி விட்டவர்கள்.

இரண்டு, அவர்கள் இருவருக்குமே- மத்திய ஆட்சி என்னும் வடவராட்சிக்குத் தங்கள் நாடு அடிமையாய் இருப்பது பற்றியும் சிறிதும் கவலையில்லை.

ஆகவே, இவ்விரு துறைகளிலும் நமக்கு எதிர்ப்பான எண்ணங் கொண்டவர்கள் - எதிரிகள் என்றே சொல்லலாம். மூன்றாவது, இவர்கள்- இரு நாட்டவர்களும் பெயரளவில் இரு நாட்டவர்க ளானாலும், அளவில், எஞ்சிய சென்னை இராச்சியம் என்பதில் 14 மாவட்டங்களில் (ஜில்லாக்களில்) இரண்டே ஜில்லாக்காரர் களாவார்கள்.........

அப்படி 14-ல், 7-ல் ஒரு பாகஸ்தர்களாக இருந்து கொண்டு, தமிழ்நாட்டின் அரசியல். பொருளாதாரம், உத்தியோகம் முதலியவைகளில் 3-ல் 2- பாகத்தை அடைத்துக் கொண்டு, இவை கலந்து இருப்பதால் நம் நாட்டை தமிழ் நாடு என்று கூடச் சொல்வதற்கு இடமில்லாமல் தடுத்து ஆண்டு கொண்டிருக் கிறார்கள். இதை, நான் ஆந்திரா பிரிந்தது முதல் சொல்லிக் கொண்டே வந்திருக்கிறேன் ஆதலால், இவர்கள் சீக்கிரம் ஒழியட்டு மென்றே கருதி வந்தேன். அந்தப்படி நல்ல சம்பவமாகப் பிரிய நேர்ந்து விட்டது. ஆதலால், நான் இந்தப் பிரிவினையை வரவேற்கிறேன்........

இந்தப் பிரிவினை அமைப்பு ஏற்பாட்டில் எனக்கிருக்கும் சகிக்கமுடியாத குறை என்ன இருக்கிறது என்றால், நாட்டினு டையவும், மொழியினுடையவும் இனத்தினுடையவும் பெயர் அடியோடு மறைக்கப்பட்டுப் போய் விடுகிறதே என்கிற குறைபாட்டு ஆத்திரந்தான். நம் நாட்டுக்கு, சமுதாயத்திற்கு, இனத்திற்கு திராவிடம் என்று இருந்த பெயர். அது தமிழல்ல என்பதானாலும், நமக்கு அது ஒரு பொது குறிப்புச்சொல்லும்,



ஆரிய எதிர்ப்பு உணர்ச்சிச் சொல்லுமாக இருக் கிறதே என்று வலியுறுத்தி வந்தேன். அதை ஆந்திர, கர்நாடக, கேரள நாட்டு மக்களல்லாமல் தமிழ் மக்களில் சிலரும் எதிர்த்தார்கள். பின்ன வர்கள் என்ன எண்ணங் கொண்டு எதிர்த்தாலும், அவர்களுக்கு மற்ற மூன்று நாட்டார் ஆதரவு இருந்ததால் அதை வலியுறுத் துவதில் எனக்குச் சிறிது சங்கடமிருந்தது. அவர்கள் மூவரும் ஒழிந்த பிறகு அவர்களையும் சேர்த்து குறிப்பிடத்தக்க ஒரு சொல் நமக்குத் தேவை இல்லை என்றாலும், ‘திராவிடன்’ என்ற சொல்லை விட்டு விட்டுத் ‘தமிழன்’ என்று சொல்லியாவது தமிழ் இனத்தைப் பிரிக்கலாமென்றால் அது வெற்றிகரமாக முடிவதற்கு இல்லாமல் பார்ப்பான் (ஆரியன்) வந்து, ‘நானும் தமிழன் தான்’ என்று கூறிக் கொண்டு உள்ளே புகுந்து விடுகிறான்.

இந்தச் சங்கடத்திற்கு, தொல்லைக்கு என்ன செய்வது என்று யோசித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்போது, இப்போது மற்றொரு மாபெருந்தொல்லை நெஞ்சில் இடி விழுந்தது போன்று வந்து தோன்றி இருக்கிறது.

அது தான் திராவிடத்தை அல்லது தமிழ்நாட்டை விட்டு ஆந்திரர் கர்நாடகர், மலையாளிகள் பிரிந்து போன பின்பு கூட, மீதியுள்ள- யாருடைய ஆட்சேபணைக்கும் இடமில்லாத தமிழகத் திற்கு ‘தமிழ்நாடு’ என்ற பெயர் கூட இருக்கக் கூடாதென்று பார்ப்பானும், வடநாட்டானும் சூழ்ச்சி செய்து, இப்போது அந்தப் பெயரையே மறைத்து ஒழித்துப் பிரிவினையில் ‘சென்னைநாடு’ என்ற பெயர் கொடுத் திருப்பதாகத் தெரிய வருகிறது.

இது சகிக்க முடியாத மாபெரும் அக்கிரமமாகும். எந்தத் தமிழ னும் அவன் எப்படிப்பட்ட தமிழனானாலும் இந்த அக்கிர மத்தைச் சகித்துக் கொண்டிருக்க மாட்டான் என்றே கருதுகிறேன். அப்படி யார் சகித்துக் கொண்டிருந்தாலும் என்னால் சகித்துக் கொண்டிருக்க முடியாதென்று சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்”.

(மேற்கண்ட நூல்-பக்-730-731)

“திராவிடம், திராவிடர் என்பதால் ஆரியர் ஆதிக்கத்துக்கு என்றும் எதிர்ப்பு இருக்கும். ஆதலால். திராவிடம் என்ற உணர்ச்சி யை அறவே அழித்தொழிக்கச் சூழ்ச்சி செய்து வரலாயினர்”-

(குடி அரசு-பெரியார்-28-5-1949)

“திராவிட மக்களாகிய நாம் உழைக்க உழைக்க, அன்னியன்

உழைப்பின் பயனை அனுபவித்து வருகிறான். இந்த நிலை மாற வேண்டுமானால், நாம் நம்மை 'திராவிடர்' என்றும், இந்தியா, இந்தியர், இந்து ஆகியவற்றிற்குச் சம்பந்தப்பட்டவரல்லர் என்றும் உறுதி செய்து கொள்ள வேண்டும்".

(பெரியார் ஈ.வெ.ரா.சி -1-பக்-543)

'தென்இந்தியர்','பார்ப்பனரல்லாதார்' என்ற இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளன. உத்தியோகங்களைப் பிரித்துக் கொடுப்பதில் 'பார்ப்பனரல்லா தார்' என்ற பிரிவினை ஒப்புக் கொள்ளப்பட்டதே தவிர, இன உணர்ச்சி ஏற் படவேண்டிய முறையில் ஒப்புக் கொள்ளப் படவில்லை. தென் இந்தியப் பெருங்குடி மக்களுக்கு இலட்சியச் சொல் ஒன்றில்லாமல் இருப்பது பெருங்கேடு. இந்தக் காரணத் தாலேயும் 'அல்லாதார்' என்ற பட்டம் நமக்குக் கூடாது என்ப தாலேயும் நாமெல்லாரும் ஒரு கூட்டிற்குள் வரவேண்டும் என்ப தாலேயும் ஒருகுறிச்சொல் தேவை, மிகமிகத் தேவை. இதைப் பல நாட்களாகவே நான் கூறி வருகிறேன்..........

இனத்தைக் குறிப்பாக வைத்துக்கொண்டு ஒற்றுமைபெற வழியில்லாதவர்கள் சமயத்தைச் சொல்லி அதன் மூலம் ஒற்றுமைப்படுகின்றார்கள். முஸ்லீம்கள், தங்கள் இனம் இன்னது என்று சொல்லா விட்டாலும் தங்களுக்குள்ளே பல இனங்கள் இருப்பதன் காரணமாக, 'இஸ்லாம்' என்ற ஒரு சமயத்தின் மூலம் ஒன்றுபட்டிருக்கின்றனர். உலகத்திலுள்ள பல்வேறு மக்கட் கூட்டத்தினரின் நிலை நாளுக்கு நாள் முன்னேற்றமும் ஒற்றுமை யும் ஏற்படுவ தாக அமைந்திருக்க இந்த நாட்டு மக்களாகிய நாம் நம்மை 'பார்ப்பனரல்லாதார்' என்ற பொருளுள்ள வார்த்தை யால் அழைத்துக் கொண்டு இருப்பதால், நம்மிடையே இன உணர்ச்சி யும் ஒற்றுமை உணர்ச்சியும் எப்படி ஏற்பட முடியும்? நம் சமயம் 'இந்து' வென்றும் நாடு 'இந்தியா' என்றும், இனம் 'இந்தியர்' என்றும் கூறி வருகிறோம். இதைத் தப்பு என்று மட்டும் நான் கூறவில்லை. வெறும் கற்பனையுங் கூட. 'இந்து' என்று. சொல்வ தால்- நாம், இவ்வளவு பெரிய இனம்,- பல சிறு சிறு வகுப்புகளாகப் பிரிந்து ஒருவரை ஒருவர் பகைத்துக் கொண்டி ருக்கத் தான் முடிகிறதே தவிர, அவ் வார்த்தையில் வேறென்ன தத்துவார்த்தம் இருக்க முடியும்?

(மேற்கண்ட நூல்-பக்-544,545)

"நாம் இந்தியர் என்பதை மறுக்கிறபடியாலும், இன உணர்ச்சியும், எழுச்சியும் பெற வேண்டுவதாலும் 'திராவிடர்'



என்னும் பெயரைக் கொண்டோம். இது புதிதாக உண்டாக்கிய தல்ல. மறந்ததை நினைத்துக் கொண்டதே யாகும். நம்மைக் குறிக்க பார்ப்பனரல்லாதார் என்கிறோம். 'அல்லாதார்' என்பதைச் சேர்த்துக் கொள்ள நாம் என்ன நாடோடிகளா? நாம் ஏன்- அல்லா தார் ஆக வேண்டும்",

(மேற்கண்ட நூல்-பக்-545)

"இனிமேல் 'திராவிடர்' என்று நம்மையும் 'திராவிட ரல்லாதார்' அல்லது 'ஆரியர்' என்று பிராமணரையும் சர்க்கார் ரிக்கார்டுகளில் குறிப்பிடவேண்டும். கிறிஸ்தவர், ஷெட்யூல்டு வகுப்பார். முஸ்லீம்கள் ஆகியோரும் திராவிடர் என்ற பிரிவில் சேருவார்களே என்று சிலர் கேட்கலாம். ஆமாம். உண்மைதான்."

(மேற்கண்ட நூல்-பக்-546)

"பிராமணர், பிராமண மகாசபை வைத்துக் கொள்ளுகிறார் கள். அதனால் அவர்களுக்குப் பெருமையும் உரிமையும் கிடைக் கின்றன. நாம் நம்மைச் சூத்திரன் என்று கூறிக் கொண்டால் உயர் சாதியானுக்கு அடிமையாயிருக்கும் உரிமை தான் கிடைக்கும். பார்ப்பானின் தாசிமக்கள் என்ற பட்டம் தான் கிடைக்கும். அந்தச் சூத்திரத் தன்மையை ஒழிப்பதையே நமது முக்கிய வேலையாகக் கொண்டிருப்பதால் தான். அப் பெயரால் எவ்விதச் சலுகையோ உரிமையோ கிடைக்காததால் தான். அப் பெயரிலுள்ள இழிவு காரணமாகத்தான், அத்தலைப்பில் அதே இழிதன்மையுள்ள திராவிடராகிய முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள், வைசியர்கள், சத்திரி யர்கள், வேளாளர்கள், நாயுடு, கம்மவார், ஆந்திரர், கன்னடியர், மலையாளிகள் ஆகியவர்களெல்லாம் ஒன்று சேர மறுத்து விடு வார்கள், ஆதலால் தான், நம்மை சூத்திரர் என்று கூறிக் கொள்ளாமல் திராவிடர் என்று கூறிக் கொள்ளுகிறோம். சூத்திரர் என்பவர்களுக்குத் 'திராவிடர்' என்பது தவிர்த்து வேறு பொருத்த மான பெயர் யாராவது கூறுவார்களானால், அதை நன்றியறிதலு டன் ஏற்றுக் கொண்டு எனது அறியாமைக்கு வருந்தி மன்னிப்புக் கேட்டுக் கொள்ளவும் தயாராயிருக்கிறேன். நீங்கள் கொடுக்கும் பெயரில் நான் மேலே கூறிய அத்தனை பேரும் ஒன்று சேர வசதியிருக்க வேண்டும். அதில். சூத்திரனல்லாத ஒரு தூசி கூடப் புகுந்து கொள்ள வசதியிருக்கக் கூடாது. அயலார் புகுந்து கொள் ளாமல் தடுக்க ஏதாவது தடையிருக்க வேண்டும். திராவிடர் என்று கூறினால் திராவிடர் அல்லாத பார்ப்பான் அதில் வநது புகுந்து கொள்ள முடியாது".

(மேற்கண்ட நூல்-பக்-549)

“திராவிடர் கழகம் என்பது சென்ற 30 ஆண்டுகளுக்கு மேலாக இந்நாட்டிலிருந்து வரும் ஒரு கழகமாகும். இது ஆதியில், தென்னிந்திய நல உரிமைச் சங்கம்’ என்னும் பேராலும், ‘ஜஸ்டிஸ் கட்சி’ அல்லது பார்ப்பனர் அல்லாதார் சங்கம்’ என்கிற பேராலும் வழங்கி வந்தது.

இந்தத் தென்னிந்திய சங்கம் (ஜஸ்டிஸ் கட்சி) என்னுடைய தலைமையின் கீழ் வந்ததும் நான் அதன் பெயரைத் திராவிடர் கழகம் என்று மாற்றி அமைத்தேன். சரித்திரத்தை ஆதாரமாகக் கொண்டு பார்க்கும் போது தென்னாட்டில் திராவிடர் என்றும் திராவிடர் அல்லாதார் என்றும் இரண்டு பிரிவான மக்கள் வாழ்ந்து வருவது புலனாகிறது. இவர்களில் திராவிடர்கள் என்று குறிப்பிடப்படும் மக்களின் நன்மைக்காகப் பாடுபட்டுவரும் கழகம் தான் திராவிடர் கழகம் ஆகும். இது (ஜஸ்டிஸ் கட்சி) இந்நாட்டில் ஆட்சிபுரிந்த காலத்தில் அன்றைய அதிகார வரம்பிற்கு உட்பட்டுத் தம்மால் திராவிடமக்களுக் கென்று என்னென்ன செய்ய இயலுமோ அத்தனையும் செய்தார்கள். என்றாலும், அவர்களால் திராவிட மக்களின் நல்லெண்ணத்தை பெறமுடியாமற் போய்விட்டது. ‘ஜஸ்டிஸ் கட்சி தங்களுக்குரிய கழகம்’ என்பது கூட திராவிட மக்களுக்கு புரியாமல் இருந்தது அப்போது. காரணம், அந்தப் பெயர்களில் உள்ள குறைபாடுகள் தான்.

‘முஸ்லிம்லிக்’ என்றதும் எப்படி ஒவ்வொரு முஸ்லீமும் அது தன்னுடைய சமூகத்திற்கு ஆக, நன்மைக்காகவே ஏற்பட்ட கழகம் என்று நம்பி எல்லா முஸ்லீமும் அதில் சேர வாய்ப்பு ஏற்பட்டதோ, அதேபோன்று, தென்னிந்தியர் கழகம் என்றால் தென்னிந்தியர் யாவரும் ஒன்றுபடும் படியான வாய்ப்புக் கிடைக்கவில்லை. தென்னிந்தியாவில் பண்புகளிலும் பழக்க வழக்கங்களிலும் மாறுபட்ட இரண்டு பிரிவான மக்கள் இருந்து வருவது தான் இதற்குத் தடையாயிருந்தது. இந்த இரண்டு பிரிவில் யாருடைய நன்மைக் காகத் தென்னிந்தியர் கழகம் பாடுபட்டதோ- அம்மக்களு டைய பேரால் ‘திராவிடர் கழகம்’ என்று அதை அழைக்க ஆரம்பித்ததும் தங்களைத் திராவிடன் என்று அறிந்த ஒவ்வொரு ஆண் பெண்ணுக்கும் திராவிடர் கழகம் தமக்காகவே இருந்து வரும் கழகம், அதில்தாம் அனைவரும் சேர்ந்து, நம் நலனைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும், என்கிற உணர்ச்சி ஏற்பட்டது. அதன்பயனாக, மக்கள் ஆயிரக்கணக்கில் திராவிடர் கழகத்தின் அங்கத்தினர்களாயினர். ஆதரவாளர்களாயினர், அதன் பயனாகத்தான் இன்று இங்கு இவ்வளவு பெரிய கூட்டத்தைக் காண முடிகிறது.



ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியிலிருந்த காலத்தில் கூட, அக்கட்சி மந்திரிகளுக்கு இவ்வளவு பெரிய கூட்டத்தில் பேசக் கூடிய வாய்ப்பே கிடைக்காமல்; இருந்ததற்கும் இது தான் காரணம். அன்று அவர்கள் திராவிட மக்களுக்குச் செய்த நம்மைகளுக் கெல்லாம் அவர்கள் பெற்ற வெகுமதி- ‘வெள்ளையனின் கூலிகள்’, ‘அன்னியரின் குலாம்கள்’ என்கின்ற கெட்ட பேர்தான். சங்கத்தின் பெயர் மாற்றம் அடைந்த பிறது, இந்நிலை அடியோடு மாறி, இன்று ஒவ்வொரு வரும் தானும் ‘திராவிடன் தான்’ என்று பெருமையோடு கூறிக் கொண்டு நம் கழகத் தில் சேரமுன் வருகிறார்கள்.

பெயர் மாற்றப்பட்டதன் பயனாக, இன்று சுமார் ஒரு இலட்சம் அங்கத்தினர்களையும், சுமார் 400 கிளைகளையும் நம் கழகம் கொண்டிருக்க வாய்ப்பேற்பட்டது மிகவும் கவனிக்கத்தக் கது. கூட்டம் கூட்ட காங்கிரஸ்காரர்களுக்கு உள்ள வசதிகள் அதிகம். அதில் சேரும் மக்களுக்கு கிடைக்கும் வாழ்க்கை வசதியும் அதிகம். ஆனால், நம் கழகத் திற்குள்ள பண வசதியோ, விளம்பர வசதியோ, அரசியலில் செல்வாக்கோ மிகக் குறைவு என்றாலும் காங்கிரஸின் பிரபலக் கூட்டங்களுக்கு இம்மியும் குறையாத அளவுக்கு- ஏன், பல தன்மைகளில் அவற்றையும் விட மேலான சிறப்புக்களோடு இப்படிப்பட்ட பெரிய கூட்டத்தை நம் கழகத்தவ ரால் கூட்டமுடிகிற தென்றால், அதற்குக் காரணம் பேர் மாற்றத் தால் ஏற்பட்ட இன உணர்ச்சி தான் என்றும் என்னால் அறுதி யிட்டுக் கூறமுடியும்................

‘தென்னிந்தியர் கழகம்’ என்பதில் திராவிடமக்களுக்குப் பற்று ஏற்படவில்லை. எனவே பேர் மாற்றப்படும் வரை, அதனுடைய வளர்ச்சி தடைப்பட்டு இருந்து வந்தது. அதன்பெயர் மாற்றப் பட்டதும் அந்த அவநம்பிக்கைபோய், மக்களிடத்து ஆதரவு அமோகமாகப் பெருக ஆரம்பித்தது

(மேற்கண்ட நூல்-பக்-554-555)

“திராவிடர் என்பதற்கு பதிலாக ‘தமிழர்கள்’ என்று ஏன் வழங்கக் கூடாது என்று சிலர் கேட்கிறார்கள். தமிழர்கள் என்று சொன்னாலே- பார்ப்பனர்கள், தாங்களும் தமிழர்கள் தாம் என்று கூறி அதில் சேர்ந்து கொள்கிறார்கள். ‘நாங்களும் தமிழ் நாட்டில் பிறக்கிறோம். வளர்கிறோம், தமிழே பேசுகிறோம். தமிழ் நாட்டிலேயே இருக்கிறோம். அப்படி இருக்கும் போது எப்படி எங்களைத் தமிழர்கள் அல்லர் என்று நீங்கள் கூறமுடி யும்? என்று கேட்கிறார்கள். ஒருகாலத்தில் தமிழர் என்பது ‘தமிழ் (திராவிட) பண்பு உள்ள மக்களுக்கு உரிய பெயராக இருந்திருக்க

கூடு மானாலும்- இன்று அது மொழிப் பெயராக மாறி விட்டிருப் பதால், அம்மொழி பேசும் 'ஆரியப் பண்புடைய' மக்கள் யாவரும் தாமும் தமிழர் என்ற உரிமை பாராட்ட முன் வந்து விடுகிறார்கள். அதோடு ஆரியர் பண்பை நம்மீது சுமத்த, அந்தச் சேர்க்கையைப் பயன்படுத்தி விடுகிறார்கள்.

அவர்களும் நாமும் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்ப தால் தான் நாம் சூத்திரர்களாகிறோம். ஆகவே, நம் கூட்டத் திலிருந்து அவர்களை விலக்கிப் பேசித்தான் நம்மைத் திராவிடர் கள் என்று அழைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. நம்மில் தமிழன் என்று சொல்லும் ஏமாளிகளைத்தான் பார்ப்பனர்களால் ஏமாற்ற முடியுமேயொழிய 'திராவிடர்' என்றால் அவர்களால் ஏமாற்ற முடியாது."

(மேற்கண்ட நூல்-பக்-556)

"திராவிட - தமிழக என்ற பேரைக் கண்டு எவனாவது முகம் சுளித்தால் அவன் முகத்தில் காரித்துப்புங்கள்! தனது தாய் நாட்டின்- தனது இனத்தின் பேரைக்கேட்டு முகம் சுளிக்கும் துரோகியின் கூட்டுறவில் நமக்கு என்ன நன்மை விளைய முடியும்?"

(-மேற்கண்ட நூல்-பக்-616)

'திராவிடர்' 'திராவிடம்' என்ற சொல் பற்றிய ஆதாரத்தை பெரியார் காட்டவில்லை அச் சொல்லை அடையாளக்குறியாக மட்டுமே பெரியார் பயன்படுத்தினார். அதற்குமேல் அச்சொல் லில் பெரியாருக்கு ஈடுபாடோ, ஆராய்ச்சியோ கருத்தோ கிடையாது என்று தோழர் மணியரசன் கூறியிருப்பது அப்பட்ட மான வடிகட்டிய கற்பனை என்பதை பெரியாரின் வாயிலாகவே அறிந்தோம். திராவிடம்,

திராவிடர் என்ற சொல்லுக்கு இது வரை பெரியார் ஆதார மாகக் காட்டியவை பார்ப்பன நூல்களே, இதுதவிர மேலை நாட்டு ஆராய்ச்சியாளர்கள் யாராவது இது பற்றி கூறிய ஆதாரத் தைக் காட்ட முடியுமா? என்று சவால் விடுத்து எழுதி இருந்தார் தோழர் மணியரசன்.

அதையும் ஏற்று மேலை நாட்டு ஆராய்ச்சியாளர்களின் ஆய்வுகளை ஆதாரமாகக் காட்டி தோழர் மணியரசனின் வாய்ச் சவடாலுக்கு முற்றுப்புள்ளி வைத்தோம். ஆரியர் கூறக் கேட்டு அய்ரோப்பியர் கூறியதே திராவிடர் திராவிடம் என்ற கருத்து என்றும் கூறி, அவரது கருத்துக்கு ஆதரவாக பாவாணர் கருத்தை



எடுத்துக் காட்டாய்க் காட்டி இருந்தார். திராவிடர் இனத்திற்கும். திராவிடத் திற்கும் எதிரானவர் பாவாணர் என்பது போல, பாவாணரை பயன் படுத்திக் கொண்டார் தோழர் மணியரசன்.

மொழியியல் வல்லுனரான பாவாணரின் முடிவுகளை வைத்தே தோழர் மணியரசனின் முகமுடியைக் கிழித்துள்ளோம். பாவாணரை பெரியாருக்கும் திராவிடக் கருத்தியலுக்கும் எதிராக நிறுத்த முயல்கிறார் தோழர் மணியரசன் ஆனால் திராவிடர் யார் என்பதை வரையறுப்பதில் கூட பாவாணரும் பெரியாரும் ஒரே கருத்து உடையவர்களாக உள்ளார்கள். "தமிழ் நாட்டின் வடபாகத்தில் லப்பை யென்றும் கீழ்பாகத்தில் மரைக்காயர் என்றும் தென் பாகத்தில் ராவுத்தர் என்றும், மலையாளத்தில் மாப்பிள்ளை என்றும் நால் வகையாகச் சொல்லப்படும் முகமதியரெல்லாம் தோற்றத்தால் வேறுபட்டுக் காணினும் பிறப்பால் தமிழ்நாட்டுக் கிறிஸ்துவரைப் போலத் தமிழர் அல்லது திராவிடரே யாவார்".

(பாவாணர்- ஒப்பியன் மொழி நூல்-1-பக்-2,3)

"மலையாள நாட்டில் பார்ப்பனரொழிந்த மற்றக் குலத் தாரெல்லாம் தமிழர் அல்லது திராவிடரே"

(பாவாணார்-திராவிடத் தாய்-பக்-33)

இனிமேல் 'திராவிடர்' என்று நம்மையும், 'திராவிடரல் லாதார் அல்லது ஆரியர்' என்று பிராமணரையும் சர்க்கார் ரிக்கார்டுகளில் குறிப்பிடவேண்டும். கிறிஸ்தவர். ஷெட்யூல்டு வகுப்பார், முஸ்லீம்கள் ஆகியோரும் திராவிடர் என்ற பிரிவில் சேருவார்களே என்று சிலர் கேட்கலாம். ஆமாம். உண்மை தான்

(ஈ.வெ.ரா.1-பக்-546)

"இந்த விஸ்தீரணத்தற்குட்பட்ட முஸ்லீம்களும் கிறிஸ்துவர் களும் தாழ்த்தப்பட்ட மக்களும், தங்களை ஆரியர் என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர் அல்லாத மற்ற இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களும் ஆகிய எல்லோரும் திராவிடர்கள் என்ற தலைப் பின் கீழ் வருவார்கள்".

(பெரியார். ஈ.வெ.ரா.சி-2-பக்-655)

ஆரியப்பார்ப்பனரோ, அவர்கள் சொல்லைக் கேட்ட அய் ரோப்பிய ஆய்வாளரோ அல்ல. தனித்தமிழ் இயக்கத்தின் தளபதி, மொழியியல் ஆய்வில் முதன்மையானவர் ஞா.தேவ நேயப் பாவாணர். அவரே திராவிடர்கள் யாரென்று வரை யறுத்து கூறியுள்ளார். அந்த வரையறையும் பெரியாரின்

வரையறையும் ஒரே மாதிரி இருக்கிறது. உண்மைகள் இப்படி இருக்க பாவாணரைப் பற்றி உண்மைக்கு மாறாக இவ்வளவு துணிச்சலோடு எழுதியுள்ள தோழர் மணியரசனின் நம்பகத் தன்மை பற்றி நாட்டோர் அறிந்து கொள் ளட்டும். ஆசை வெட்க மறியாது என்பார்கள். இப்போது தான் தெரிகிறது ஆத்திரமும் வெட்கமறியாது என்று. திராவிடர் என்று பெயரிட்டால் பார்ப்பனர்கள் அதில் இடம் பெற மாட்டார்கள் என்பதெல் லாம் இருபதாம் நூற்றாண்டு அரசியல் தேவைக்காகப் புனைந்து கொள்ளப்பட்டதே. தமிழகத்தில் பார்ப்பன வகுப்பில் தோன்றிய திருஞானசம்பந்தரை 'திராவிட சிசு' என்று அழைத்தவர் ஆதி சங்கரர் என்ற பார்ப்பனர்". என்று தோழர் மணியரசன் கூறியுள் ளார். திராவிடர் என்று பெயர் மாற்றினாலும் பார்ப்பனர் கள் சேர்ந்து கொள்வார்கள் என்பதற்கு வரலாற்று ஆதாரம் தான் திருஞானசம்பந்தரை 'திராவிட சிசு' என்று ஆதிசங்கரர் கூறியது என்கிறார்.

வரலாற்றின் நீண்ட பாதையில் தோழர் மணியரசன் சொன்ன- எடுத்துக் காட்டிய உதாரணம் ஒன்றே ஒன்று தான். திராவிடரில் பார்ப் பான் சேர்ந்து கொள்கிறான் என அதை தனக்கு சாதகமாக தோழர் மணியரசன் கூறுவதைப் போல, திராவிடர்கள் தமிழ் நாட்டின்

பூர்வகுடிகள் என்பதற்கு அவர் கூறிய 'திராவிட சிசு' உதாரணத்தைக் காட்டுவோரும் உண்டு.

ஆனால் இப்போது நடைபெறுகின்ற செயல்களோ தந்தை பெரியார் கூறியதைப் போன்று 'தமிழர்' என்று சொன்னால் பார்ப்பான் நானும் தமிழன் என்று நுழைந்து விடுகிறான்.

சில வருடங்களுக்கு முன்பு ஆர். வெங்கட்ராமன் இந்திய ஜனாதி பதியான போது தமிழ்நாட்டு பத்திரிகைகள் எல்லாம் "இந்தியாவின் ஜனாதிபதியான முதல் தமிழர்" என்று கொட்டை எழுத்துக்களில் போட்டு புல்லரித்துப் போனார்களே! தோழர் மணியரசன் கவனிக்கவில்லையா? அல்லது ஆர். வெங்கட் ராமனையும் தமிழன் என்ற ஏற்றுக் கொள்ளும் மனநிலை ஏற் பட்டு விட்டதா? எனென்றால் பார்ப்பனர்களை தமிழர் என்று ஏற்றுக் கொண்டு விட்டால், ஆரியப்பண்பை நம்மீது சுமத்த அந்தச் சேர்க்கையைப் பார்ப்பனர்கள் பயன்படுத்தி விடுகிறார் கள் என்று தந்தை பெரியார் சொன்னது தோழர் மணியரசன் அவர் களுக்கும் பொருந்தும். தோழர் மணியரசன் மற்றும் தமிழ்தேசியவாதிகளுக்கு பார்ப்பனர்களுடன் பழக்கம் உள்ளது.



ஏன், ராஜகுருவாக சில பார்ப்பனர்கள் அவர்களுக்கு இருக்கிறார் கள்.

தமிழர் இயக்கம் என்பதால் ஏற்பட்ட கூடாத சேர்க்கையும், குயுக்தியான அறிவுரையும்தான் தோழர் மணியரசனை இவ்வாறு எழுத வைத்துள்ளது. பார்ப்பன சூழ்ச்சிக்குப் பலியாகி பார்ப்பனக் குரலா கவே மாறிவிட்டார். இல்லாவிட்டால், வரலாற்றிலும். தொல் பொருள் ஆய்விலும், மொழியியலிலும் முதிர்வு பெற்ற ஆய்வாளர்களின் கருத்துக்களை எல்லாம் திட்டமிட்டே ஒதுக்கி வைத்துவிட்டு திராவிடம், திராவிடர் என்ற கருத்தியலுக்கு எதிராக தொடை தட்டி மல்லுக்கு நிற்க மாட்டார்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, திராவிடத்திற்கு எதிரான செய்கை என்பது பார்ப்பனியத் துக்கு ஆதரவானது. பெரியாரி யலுக்கு முரணானது, ஆரிய மனுஸ்மிருதியின்- சங்கரமடங்களின் வளர்ச்சிக்கு ஊட்டச் சத்தானது. இதைத்தான். அவ்வப்போது தமிழர்களின் பாது காவலர்கள் தாங்கள் தான் என்று கூறிக் கொண்டு சில அரை வேக்காட்டு சிந்தனையாளர்கள் செய்து கொண்டு இருக்கிறார்கள். இதனால் தமிழ் தேசியம் வளர்ச்சி பெறும் என்று வரட்டுக் கூச்சல் போடுவது அவர்களின் அறியாமையையே காட்டுகிறது. கடந்த கால தமிழக வரலாறு உணர்த்தும் செய்தியும் இது தான். ம.பொ.சி என்கிற விநோதமான மனிதர் அதைத் தான் செய்தார். பார்ப்பன இந்து மத நம்பிக்கை களோடு தமிழ் தேசியம் பேசி திராவிடத்தை விமர்சனம் செய்தார். அரசு பதவி என்பதும் அனைத்தும் தூக்கி எறிந்து விட்டு திராவிடர்களின் காலடியில் கிடந்தார்.

தென்செய்தி இதழில் முனைவர் அ.காமாட்சி நாதன்" திராவிடமாயை அழியட்டும்" என்ற கட்டுரையிலும்,"மலையாள மொழிக்கு அரும்பெரும் தொண்டாற்றிய மூன்று பெருமக்களில் உள்ளூர் பரமேஸ்வர அய்யர் ஒருவர். பொதுவாக இவரது மலை யாளத் தொண்டுக்காக மதிப்பும் மரியாதையும் இருந்தாலும் அவர் தமிழன் என்ற காரணத்திற்காக அவரது சிறப்பைக் குறைத்துப் பேசிடும் மலையாளிகளும் உண்டு" என்று எழுதியுள்ளார். பார்ப்பானை தமிழர் என்றே குறிப்பிடுகிறார். அதையும் தோழர் பழ. நெடுமாறன் அவர்களும் அங்கீகரித்து தனது இதழில் வெளியிடுகிறார். மேலும் கட்டுரையாளர் தமது கட்டுரை முழுவதும் சமஸ்கிருதத்தை வடமொழி என்றே குறிப்பிடுகிறார்.

நேரடியாக சமஸ்கிருதம் என்று எழுதக்கூட அவரால் இயலவில்லை. அதிலும் நாம் முன்னர் குறிப்பிட்ட அ. காந்திரதாவ் எழுதிய தென்பெருங்கடல் ஆய்வுகள் என்ற நூலின்

தமிழாக்க நூலை வெளியிட்ட தோழர் பழ. நெடுமாறன் அவர்களே 'திராவிடமாயை அழியட்டும்' என்ற கட்டுரைக்கும் துணை நிற்கிறார். ஆக, தோழர் மணியரசன் மட்டுமல்ல தமிழ் தேசியவாதிகள் அனைவருமே திராவிடம் மாயையானது என்றும் பார்ப்பானை தமிழன் என்றும் கருதி ஏற்றுக் கொள்ளும் முடிவில் இருக்கிறார்கள். அதனால் தான் பார்ப்பானின் பண்பு களை உள்ளடக்கிய தமிழ்தேசியம் பேசி திராவிடத்தை எதிர்க் கும் வீபிஷண வேலை செய்து வருகிறார்கள். சாதி ஒழிப்பு, ஆரிய பார்ப்பன மூடத்தனம், பண்பாடுகளை எதிர்த்து இயக்கம் நடத்தாமல் பார்ப்பனிய குண நலன்களை கொண்ட தமிழ் தமிழர் என்ற பெயரிலேயே தேசியம் பேசுகிறார்கள் சாதிய பற்று, இந்து மத கடவுள் வழிபாடு, சடங்கு, சம்பிரதாயம், மூடநம்பிக் கைகள் கொண்ட தமிழ் தேசியம் எந்த வகையில் இந்திய தேசியத்திற்கு மாற்றாக அமையும் என்பதைதமிழ்தேசியவாதிகள் நேர்மையாக விளக்க வேண்டும்.

மேற்கண்ட இந்து மத பண்புகளோடு கூடிய தமிழ்தேசியத் தின் மூலம் தமிழர்கள் விடுதலை பெற முடியுமா? பெயர் தான் மாறுமே தவிர, இன இழிவும், ஏற்றத்தாழ்வுகளும் கொண்ட சமூக நிலையில் மாற்றம் இருக்காது. பார்ப்பனச் சார்பு கொண்ட தமிழ்தேசியம் என்பது இங்கே தேவையேயில்லை. அதுதான் இந்துதேசியம், இந்தியதேசியம் என்ற பெயரிலே நிலைபெற்று நீடித்து வருகிறதே! ஊசி உளுத்துப் போன பார்ப்பனீயத்தை மீண்டும் தமிழ்தேசியம் என்று வக்காலத்து வாங்க வேண்டாம் என்று தான் பெரியார் திராவிடர் கழகம் கூறுகிறது.

இப்படிப்பட்ட 'அறிவார்ந்த' தமிழ்தேசியத்தை விட 'கொச்சையான திராவிடமே' எங்களுக்குப் போதும். இதை புரிந்து கொள்ள வேண்டியவர்கள் புரிந்து கொள்ளவேணடும்.

"தமிழர்கள் தான் திராவிடத்தைத் தூக்கிச் சுமந்தார்களே அன்றி தெலுங்கரோ, கன்னடரோ, மலையாளியோ, திராவிடம் என்பதை ஏற்க வில்லை" என்று தோழர் மணியரசன் கூறுகிறார்.

தெலுங்கரோ, கன்னடரோ,மலையாளியோ திராவிடத்தை ஏற்கவில்லை என்பதற்காக திராவிடம், திராவிடர் என்கிற வரலாற்று உண்மையை மறைக்க முடியுமா?

தெலுங்கரும், கன்னடரும், மலையாளியும் பார்ப்பன கருத்துக் களையும் மொழியையும் ஏற்றுக்கொண்டு பார்ப்பன சார்பாகிப் போனதால் தமிழர்களும் பார்ப்பனீயத்தை ஏற்றுக் கொண்டு இயக்கம் நடத்த வேண்டுமா? முடியுமா?



தோழர் மணியரசன் தமிழ்தேசிய பொதுவுடைமைக் கட்சி நடத்துகிறார். இதை எத்தனை தமிழர்கள் ஏற்றுக் கொண்டார் கள்? எத்தனை தமிழ்தேசியவாதிகள் தோழர் மணியரசனை ஏற்றுக் கொண்டார்கள்? ஒன்றிணைந்த தமிழ்தேசியக்குழுக்களெல்லாம் உடைந்து போனதே?

காரணம் என்ன? தமிழ் தேசியகருத்தில் உடன்பாடில் லையா? அல்லது தலைமைப்பதவி யாருக்கு என்பதில் தகராறா? சரி, பொதுவுடைமைக்கட்சி என்கிறார் தோழர் மணியரசன். பொதுவுடைமைக் கட்சியா? தரகுதேசிக்கட்சியா? என்று தோழர் கார்முகில் உங்கள் பொதுவுடைமை முகமூடியை நார் நாராகக் கிழித்து உள்ளாரே! அது ஏன்?"விலக்கியது ஏன்" என நீங்க ளும் 'விலகியது ஏன்' என தோழர் இராசேந்திரசோழனும் சுற்றறிக்கை அனுப்பினீர்களே? உங்களுக்கும் தோழர் இராசேந்திர சோழனுக் கும் இடையே ஏற்பட்ட கருத்து மாறுபாடு கருத்தியலுக்கா?

இதிலிருந்து தெரிவதென்ன- தோழர் மணியரசனை, தமிழர் களும் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ் தேசியவாதிகளும் ஏற்றுக் கொள்ளவில்லை. பொதுவுடைமைவாதிகளும் ஏற்றுக் கொள்ள வில்லை. உடனிருந்தோரும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது.

தோழர் மணியரசன் என்ன செய்யப் போகிறார்? இப்படி யாருமே தன்னை ஏற்றுக்கொள்ளவில்லையே என்று கட்சியைக் கலைத்து விட்டு காவி கட்டிக் கொள்ளப்போகிறாரா?

திராவிடம், திராவிடர் பற்றி தோழர் மணியரசன் கூறியவற் றில் அவருக்கு உறுதி இருக்குமானால், அவரைப் பொறுத்தவரை மேற் சொன்ன முடிவுதான் அவருக்கு மிகச்சரியாக இருக்கும். என்ன செய்யப் போகிறார் என்பதைப் பொறுத்திருந்து பார்ப் போம்.

"தமிழ்தேசப் பொதுவுடைமைக் கட்சி தனது தொடக்க நிலையில், திராவிடர் என்பதை மரபினமாகக் கருதியது. பின்னர் ஆழமாக ஆய்வு செய்த அடிப்படையில் அக்கருதுகோள்பிழை என்ற முடிவுக்கு வந்தது" என்னும் தோழர் மணியரசன் தனது நூலில் கூறுகிறார்.

திராவிடம், திராவிடர் என்பதற்கான ஆதாரங்களை நாம் முன்னர் எடுத்துக்காட்டியிருந்தோம். இவையனைத்தும் தோழர் மணியரசனுக்கு தெரியாத இரகசியசெய்திகள் அல்ல. இருப்பினும் அவர் ஏன் அதற்கு எதிராக திராவிடர் என்ற கருதுகோள் பிழை என்ற முடிவுக்கு வந்தேன் என்று எழுதுகிறார்

என்பது தான் நாம் புரிந்து கொள்ள வேண்டிய மிகமுக்கிய சங்கதியாகும். தந்தை பெரியார் இறந்து 30 ஆண்டுகளைக் கடந்தும். இன்றைக்கும் பெரியாரியலின் பேரில் இளைஞர்கள் ஈடுபாடுகாட்டி பெரியார் இயக்கத்தில் ஏராளமானோர் இணைந்து பணியாற்றி வருகிறார் கள். ஆனால், தமிழ்தேசியம் பேசும் குழுக்களோ சவலைப் பிள்ளை களாய் படுக்கை யில் கிடக்கின்றன. இதற்கான காரணத்தை ஆய்வு செய்த தோழர் மணியரசன், இருக்கின்ற ஒன்றிரண்டு தோழர் களைக் காப்பாற்ற வும் திராவிடர் இயக்கத்தில் இருக்கின்ற தோழர்களைக் குழப்பி தன்பால் ஈர்ப்பதற்கும் குறுக்கு வழியை- அதாவது "புள்ள புடிக்கிற வேலை" என்று பேச்சு வழக்கில் சொல்லுவார்களே அந்த வேலையைச் செய்துள்ளார். இளைஞர்கள் ஏன் திராவிடர் இயக்கத்தில் ஈடுபாட்டுடன் இணைந்து இயக்கப் பணியாற்று கிறார்கள்? தமிழ் தேசியத்தின் மீது ஏன் அக்கறையில்லாமல் இருக்கிறார்கள்? என்று உண்மையான காரணத்தைத்தேடி ஆய்வு செய்து இருக்கவேண்டும்.

காரணத்தைத் தேடி ஆய்வு செய்யாமல், இவரே ஒரு காரணத்தை உருவாக்கி அதற்கான ஆதாரங்களைத் தேடி ஆய்வு செய்துள்ளார். ஆய்வின் அடிப்படையே பிழையாக இருக்கும் போது முடிவு மட்டும் எப்படி சரியாக இருக்கும்.

"சூத்திரன் என்பதையே ஏற்றுக் கொண்டவர்கள். திராவிடர் என்பதையும் ஏற்றுக் கொண்டார்கள்" என்கிறார்.

சூத்திரப்பட்டம் ஒழிய வேண்டும். சுதந்திர மனிதனாய் வாழ வேண்டும் என்கிற சுயமரியாதை உணர்ச்சியை உடையவர்கள் தான் -அதற்கான தீர்வாய், அதற்கான இயக்கமாய், அதற்கான தத்துவமாய், அதற்கான நடைமுறையாய், தந்தை பெரியாரை, தந்தை பெரியாரின் திராவிடர் இயக்கத்தை பார்க்கிறார்கள். ஏனென்றால், தந்தை பெரியாரும் அவரது இயக்கமும் சூத்திரப் பட்டத்தை ஒழிக்கக் கொடுத்த, கொடுத்துக் கொண்டிருக்கின்ற விலை மிகப் பெரியதாகும். அதைப்பற்றி விரிவாக பின்னர் பார்ப்போம்.

ஆனால், தமிழ்தேசிய குழுக்கள் சூத்திரப் பட்டம் ஒழிய, சாதி இழிவு ஒழிய. இன விடுதலை பெற இதுவரை என்ன செய்திருக்கிறார்கள்? பட்டியலிட்டுக் காட்டமுடியுமா? விதைத்து உழைத்து கறுத்தவன் ஒருவன் இருக்க- அறுவடைக்கு மட்டும் வேறொருவன் வந்தால் அதன் விளைவு என்னவாகும்? யோசிக்க வேண்டும். தன்னுடைய சமூக முன்னேற்றத்திற்கு உழைக்கும் இயக்கத்தின் பேரில்தான் இளைஞர்கள் ஈடுபாடு காட்டுவார்



களே அன்றி வறட்டு வேதாந்திகளின் மாய்மாலங்களுக்கு மயங்க மாட்டார்கள். சமூக இழிவுகளை நீக்கி இன விடுதலை பெற என்ன செய்ய வேண்டும் என்பதை ஆய்வு செய்ய வேண்டும். அதை யொட்டி கொள்கைத்திட்டம், கட்சி வேலைத் திட்டம் ஆகியவற்றில் மாற்றம் செய்ய வேண்டும் தோழர் மணியரசன் போன்றவர்கள் சுயவிமர்சனத்திற்கு பயந்து கொண்டு பழியைத் தூக்கி திராவிடர் இயக்கத்தின் மீது போட்டு விடுவதால் மட்டும் உங்கள் இயக்கம் வளராது. அது உங்களை நம்பியுள்ள அப்பாவித் தோழர் களை வேண்டுமானால் திருப்திப் படுத்தும். அதுவும் அவர்கள் உண்மையைத் தெரிந்து கொள்ளும் வரைதான்.

திராவிடம், திராவிடர் என்ற கருத்தியலுக்குப் பின்னால் மக்கள் எழுச்சியுடன் திரண்டார்கள்- திரளுகிறார்கள் என்றால், அது மக்களின் உணர்வோடு, பிரச்சனைகளோடு கலந்துவிட்டது தான் காரண மேயன்றி 'திராவிட மாயை'- யால் அல்ல. மக்கள் பிரச்சனைகளுக்காகப் போராடும்; இயக்கம்தான் வெற்றி பெறும் என்பது வரலாற்று உண்மை. அந்த உண்மை பெரியார் இயக்கத் திடம் உள்ளது. மக்களின் நம்பிக்கையை பெற்றதால் தான் இளைஞர்கள் இன்றும் இவ்வியக்கத்தில் சேர்கிறார்கள் இது மற்றவர்களுக்கு வயிற்றெரிச்சலை உண்டாக்கினால், யார் என்ன மருந்து தரமுடியும்?

"தமிழர் பண்பாடு, நாகரீகம் பற்றி பேசும் தோழர் கொளத்தூர் மணி திராவிட இனப் பெருமிதம் பற்றி பேச மாட்டாரா?" என்கிற தோழர் மணியரசன் "பெரியாரைத் தலைவராக ஏற்றுக் கொண்ட ஓர் இயக்கத்திற்கு" என்றும் எழுதுகிறார். "பெரியார் திராவிடர் கழகம் என்பது தந்தை பெரியாரை தலைவராக ஏற்றுக் கொண்ட இயக்கம்" என்கிற தோழர் மணியரசன் கூற்று தவறாகும். அக்கூற்று, ஏதோ ஒரு புதிய இயக்கம் தோன்றி அதற்கு பெரியாரைத் தலைவராக ஏற்றுக் கொண்டனர் என்றே பொருள் படும்.

அக்கூற்றின் நோக்கம் பெரியாரையும், பெரியார் திராவிடர் கழகத்தையும் அன்னியப்படுத்துதல் ஆகும். பிரித்துப் பார்த்து சுகம் காணுகிறார் தோழர். மணியரசன். இந்த வாய்ப்பின் பயனாக நாம் சொல்லிக்கொள்வது. பெரியார் திராவிடர் கழகம் என்பது பெரியாரை தலைவராக ஏற்றுக் கொண்ட இயக்கம் மட்டும் அல்ல. தந்தை பெரியார் இயக்கத்தின் நீட்சி, தொடர்ச்சி. தந்தை பெரியாரின் இலட்சியங்களை நிறைவேற்றுவதில் முனைப்போடு செயலாற்றும் இயக்கம். சமரசங்களுக்கு

வாய்ப்பளிக்காமல் சாதனைகளை மட்டுமே சாதிக்கும் இயக்கம். குழப்ப நினைக்கும் இவர்களின் கனவு பலிக்காது. தந்தை பெரியாரின் பணியின் தொடர்ச்சியாய் இவ்வியக்கம் செய்த வற்றைப் பற்றி விவரம் பற்றி பின்னர் விவரிப்போம்.

தமிழர் நாகரீகம். பண்பாடு பற்றி தோழர் கொளத்தூர் மணி கூறியது பற்றி அங்கலாய்க்கும் தோழர் மணியரசன் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறோம். நாகரீகம் பண்பாடு பற்றிய தோழர் கொளத்தூர் மணியின் கருத்து நீங்கள் சொல்வது போல் அவருடைய தனிப்பட்ட கருத்தல்ல. தந்தைபெரியாரின் கருத்து தான். இருகருத்தும் ஒன்று தான். பிரித்துப் பார்ப்பது தான் உங்களுக்கு மகிழ்ச்சியைத் கொடுக்கு மென்றால், என்ன செய்வது? ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொன்றில் சுகம்; உங்களுக்கு இதில் சுகம். நாகரீகம், பண்பாடு பற்றி பெரியார் சொல் வதைப் பாருங்கள். இதோடு தோழர் கொளத்தூர் மணியின் கருத்தை ஒப்பிட்டுப் பார்த்து உண்மை எது? உளறல் எது? என்று உணருங்கள். பெரியார் கொள்கைக்கு- மாறுபட்டு செயல்படுகிற இயக்கமல்ல பெரியார் திராவிடர் கழகம். மாறுபட்டு செயல் படுகிற தலைவரல்ல கொளத்தூர் மணி.

"நாகரீகம் என்கின்ற வார்த்தைக்கு எந்தக் கருத்தை வைத்துக் கொண்டு பேசினாலும் மக்கள். சமூகம், நடை ஆகாரம் மற்றும் எல்லா பாவனைகளிலும் பெரிதும் மாறுபட்டிருக்கிறது. எந்த ஆதாரத்தினால் இவைகள் வேறுபட்டிருக்கின்றன வென்று கூறமுடியாது. எப்படியோ, எல்லாம் மாறுதலில் தான் போய்க் கொண்டிருக்கிறது. நம்முடைய பெண்கள் முன்பு முழங்கைக்குக் கீழும் இரவிக்கை அணிந்து வந்தார்கள். பின்பு மேலேறியது. மறுபடியும் கீழே இறங்கியது. இப்பொழுது மறுபடியும் மேலேயே போய்க் கொண்டிருக்கிறது. மேல் நாட்டுப் பெண்களும் தெருக் களில் தெருக் கூட்டுவது போன்ற ஆடைகளை முன்பு அணிந்து வந்தார்கள். அந்தக் காலத்தில் துணிகளைத் தூக்கிப் பிடித்துக் கொள்ள பணம் படைத்தவர்கள் ஆட்களை நியமித்துக் கொண் டிருந்தார்கள். அது அக்கால நாகரிகம். இப்பொழுது என்ன வென்றால் ஆடை விஷயத்தில் மேல்நாட்டுப் பெண்களும் எல்லாம் சுருக்கிக் கொண்டு விட்டார்கள். அதை நாம் இப் பொழுது நாகரிகம் என்று தான் கருதுகிறோம். நாம் இவை களைப் பற்றி யெல்லாம் பேசும் பொழுதும் யோசிக்கும் போதும் எந்த வித மாறுதலும் இல்லாமல் - அதாவது சாதி, மதம், தேசம் என்ற பற்றுதல்களை விட்டு விட்டு Free யாக சுயேச்சையாக சீர்தூக்கிப் பார்த்தால் தான் விஷயங்களை நன்றாகத் தெரிந்து



கொள்ளலாம். அதன் உண்மையும் அப்பொழுது தான் விளங்கும்.

ஒரு காலத்தில் சாம்பலைப் பூசிக் கொண்டு 'சிவ, சிவ' என்று ஜெபிப்பது தான் யோக்கியமாகக் கருதப்பட்டது. இன்றைய கால தேச வர்த்தமானங்கள் மேற் சொன்ன விஷயத் தைக் கேலி செய்கிறது.

கணவன், மனைவி என்கின்ற இரு சாரார்களை எடுத்துக் கொண்டாலும் முன்பு- கல் என்றாலும் கணவன் புல் என்றாலும் புருஷன் என்று மதித்து அடுப்பூதுவதே ஒரே கடமை என்று நடந்து வந்த பெண்களைப் பற்றிப் பெரிதும் மதித்து வந்தார்கள். ஆனால், இன்றோ, கணவனிடம் மனைவியானவள், 'நான் உனக்கு வேலைக்காரியா? அடிமைப்பட்டமாடா? ஜாக்கிரதையாயிருந் தால் சரி, இல்லா விட்டால் எனக்குச் சம அந்தஸ்தும், சம உரிமையும், சர்வ சுதந்திரமும் உண்டு! என்று கர்ஜனை செய்யும் பெண்களையே நாகரீகம் வாய்ந்தவர்கள் என்று கருதுகிறோம்.

முன்பு புராணத்தைப் பற்றியும் மதத்தைப் பற்றியும் பேசுவது தான் வித்வத் தன்மையாக இருந்தது. ஆனால், அது இன்று குப்பையாகி பரிக சிக்கத்தக்கதாக ஆகிவிட்டது. புத்திக்கும் அறிவிற்கும் பொருத்த மில்லாத முரட்டுப்பிடிவாதத்தில் முன்பு நம்பிக்கையிருந்ததை சிலாகித் துப் பேசினோம். ஆனால் இன்றைய தினம் பிரத்தியட்சமாக எதையும் எடுத்துக்காட்டி தெளிவு படுத்துவதையும் விஞ்ஞானம் போன்ற அறிவியக்க நூல்களைக் கற்றுணர்ந்த வல்லுநர்களையுமே நாம் பெரிதும் மதித்து வருகி றோம். நாகரிகம் என்பது நிலைமைக்கும். தேசத்துக்கும் காலப் போக்கிற்கும் தக்கவாறு விளங்குகிறது. கால தேச வர்த்தமான வழக்கத்தையே ஒட்டி நாகரிகம் காணப்படுகிறது. காலப் போக் கானது எந்த விதத் தேக்கத்தையும் உண்டாக்குவதில்லை ஒன்றிலிருந்து மற்றொன்று தோன்றவும் புரட்சி ஏற்படவும் செய் கின்றது. மீசை, தலைமயிர் இவைகளைப் பற்றிப் பலர் பேசி னார்கள். எது நாகரிகம் என்று கருதுகின்றோமோ அது பெருத்த அஜீரணத்துக்கு வந்து விடுகிறது. மீண்டும் அந்த நிலைமை யானது மாறிக் கொண்டு போகத்தான் செய்கின்றது.............

நாம் ஒரு காலத்தில் தேசம், தேசியம், தேசப்பற்று என்பதை நாகரிகமாகக் கருதி வந்திருக்கிறோம், ஆனால் இன்றோ அவை களை யெல்லாம் உதறித்தள்ளி மனித ஜீவகாருண்யம், உலக சகோதரத்துவம். மக்கள் அபிமானம் (CITIZEN OF THE WORLD HUMAN-ISM) என்று கருதுவதையே பெரிதும் நாகரிகமாகக் கருத முன் வந்து விட்டோம்...............

நம்மிடையேயுள்ள சாதி அபிமானம், சொந்தக்கார அபிமானம், பாஷாபிமானம், தேசாபிமானம் எல்லாம் தொலைய வேண்டும். இல்லாவிட்டால் எந்த நல்ல விஷயத்திலும் நாம் முடிவு காணுவது சரியாக ஆகிவிடாது.

(பெரியார் ஈ.வெ.ரா. சி.-பக்-1151-1153-புரட்சி- 31.12. 1933)

"ஒழுக்க விஷயங்களிலும், அதுபோலவே மக்களிடம் மக்கள் நடந்து கொள்கிற ஒழுக்கத்தைப் பற்றித் தான் சுயமரியாதைக் காரருக்குக் கவலையே ஒழிய- எப்படிக் குடுமி வைப்பது. எப்படி வேட்டி கட்டுவது. எப்படிப் பொட்டுப் போடுவது. எப்படி பிரார்த்தனை செய்வது, யாரைத் தொடுவது, யார்வீட்டில் சாப்பிடுவது. எது சாப்பிடலாம். எது சாப்பிடக் கூடாது, எத்தனை கடவுள், ஏந்தக் கடவுளைக் கும்பிடுவது, எதைக் கும்பிடக் கூடாது, எது வேதம், எது சாஸ்திரம் என்பன வைகளில் சுயமரியாதைக் காரருக்குக் கவலை இல்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், எந்த மனிதனும் அன்னியனுக்கு உபகாரி யாயும். கடைசி பட்சம் அன்னியனுக்குத் தன்னால் துன்பம் கொடுக்காதவனாகவும் இருப்பதே பெரிய ஒழுக்கம் என்று சுயமரியாதை இயக்கத்தார் தருதி இருக்கிறார்கள்".

(பெரியார்.ஈ.வெ.ரா.சி.-பக்-1080, -குடியரசு-24.11.1940)

"உலகில் கற்பு, காதல் என்பன போன்ற வார்த்தைகள் எப்படிப் பெண்களை அடிமைப்படுத்தி அடக்கி ஆளவென்று ஏற்படுத்திப் பயன்படுத்தப்பட்டு வருகின்றனவோ, அதுபோலவே தான் ஒழுக்கம் என்னும் வார்த்தையும்- எளியோரையும், பாமர மக்களையும் ஏமாற்றி,

மற்றவர்கள் வாழப் பயன்படுத்திவரும் ஒரு சூழ்ச்சி ஆயுதமேயல்லாமல், அதில் உண்மையோ, சத்தோ ஒன்றுமே கிடையாது. கற்பு, காதல், சத்தியம், நீதி, ஒழுக்கம் என்பன எல்லாம் ஒரே தாயின் பிள்ளைகள், அதாவது, குழந்தைகளைப் பயமுறுத்தப் பெரியவர்கள், பூச்சாண்டி, பூச்சாண்டி' என்பது போல், இவை எளியோரையும் பாமர மக்களையும் வலுத்தவர்களும் தந்திரக் காரர்களும் ஏமாற்றச் செய்த ஒரு பெரும் சூழ்ச்சியே ஆகும்.

எப்படிக் குழந்தைப் பருவம் உள்ள மட்டும் பூச்சாண்டிக்கு மக்கள் பயப்பட வேண்டியிருக்கிறதோ, அது போலத்தான் அறிவும், சக்தியும் மக்களுக்கு ஏற்படும் வரை- மேற்கண்ட ஒழுக்கம் முதலிய பூச்சாண்டிகளுக்கு அவர்கள் பயப்பட்டுத் தீர வேண்டியிருக்கிறது".

(பெரியார் ஈ.வெ.ரா.சி.-பக்-1081,1082-குடியரசு-4.6.1949)



"மாறுதல் என்பது இயற்கையேயாகும். மாறுதல் இல்லாமல் எந்த நாடும், எந்த சமூகமும் எந்த வஸ்துவும் இருக்க முடியாது" என்கிற பெரியார், நாகரிகம். ஒழுக்கம் போன்றவை பற்றியும், கால மாற்றத்திற்கேற்ப மாறக் கூடியவை என்றும், வாழ்க்கை முறைக்குத் தேவையான, வசதியான, பிறருக்குத் தொல்லை தராதவற்றையுமே நாம் பின்பற்ற வேண்டும் என்கிறார். இதை யொட்டி தோழர் கொளத்தூர் மணியின் கருத்துக்களை ஊன்றிக் கவனித்தாலே தெரியும், பெரியாரியலின் நீட்சியாகத்தான் அவர் கருத்தும் வெளிப்பட்டிருக்கும்.

திராவிடம், திராவிடர் என்ற சொல்லை பயன்படுத்துவதற்கான காரண காரியங்களை மிகத் தெளிவாக விளக்கியிருந்தோம். இது தந்தை பெரியாரின் காலத்திலிருந்தே தெரியப்பட்ட செய்தியாகும். ஆனால், தோழர் மணியரசன் "நாங்கள் தனித் தமிழ்நாடு கோராதவர்கள் என்பதை மறைமுகமாக தில்லி ஏகாதிபத்தியத்திற்குச் சுட்டிக் காட்டவே, தமிழ்நாட்டில் 'திராவிடம்' என்ற சொல்லை, அரசியல் மற்றும் சமூக இயக் கங்கள் இன்று பயன்படுத்துகின்றன. இதைத் தில்லி ஏகாதி பத்தியமும் புரிந்து கொண்டு திராவிடக்கட்சிகளை அரவணைக் கிறது.

இந்த வகையில் 'திராவிடம்' பார்ப்பனியத்திற்கு ஒன்று விட்ட பங்காளி ஆகிவிட்டது" என்கிறார்.

மேலும்."பெரியாரியம் பேசுவோரில் ஒரு சாரார் தமிழ்த் தேசியத்தை முன்வைக்க மறுக்கும் சில காரணங்களில் ஒன்று அரசின் அடக்குமுறை வரும் என்ற அச்சம்" என்கிறார்.

அவர் சொல்ல வருவது என்னவென்றால், "தமிழ்த்தேசியவாதிகள் தைரியசாலிகள் - வீரர்கள் - சூரர்கள். திராவிடம், பெரியாரியம் பேசுபவர்கள் கோழைகள்- பயந்தாங்கொள்ளிகள் என்பதே. கடந்த காலத்தில் நடந்த வரலாறுகளைக் கூறி எது வீரம், எது கோழைத்தனம் என்று பட்டியலிட்டு இருந்தால் அவருடைய யோக்கியதையை பாராட்டி இருக்கலாம். பொதுவாக பயம்- அச்சம் என்று எழுதுவதில் என்ன நேர்மை இருக்கிறது? உண்மை இருக்கிறது?

கோழைத்தனத்தை குறிப்பிட்டுக் காட்டி எழுதியிருந்தால் அவர் குணத்தைப் பாராட்டலாம். மாறாக, அரசின் அடக்கு முறைக்கு பயந்தவர்கள் பெரியாரியம் பேசுவோர் என்கிறார்.

மனித உரிமைகள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அனைத்து அடக்குமுறைச் சட்டங்களையும் சந்தித்து, அதன் கொடிய கரங்களில் சிக்கி சோதனைகளை அனுபவித்து, நீண்ட

*நாட்கள் சிறையில் வாடிய பின்னும் பெரியாரியக்கத்தை இன்று வரை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் தலைவர்கள். தற்பெருமைக்கோ, வேறு எந்த இலாபத்தை நோக்கமாகக் கொண்டோ அல்ல, தோழர் மணியரசன் போன்றோரால் திட்ட மிட்டு மறைக்கப்படும் தியாக வரலாற்றை வெளிக் கொண்ரவே கீழ்கண்ட பட்டியலைத் தருகிறோம். வரலாறு முடிவு செய்யும், வீராதிவீரர்கள் யார் என்று.*

*1991 ஆம் ஆண்டு தேசிய பாது காப்புச்சட்டத்தில் கைது- சிறை. 1994 விடுதலைப்புலிகள் தொடர்பாக 'தடா' சட்டத்தில் 7 மாத சிறை.*

*1995 ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு 1 ஆண்டு வேலூர் சிறையில் இருந்தார்.*

*2001 ஆம் ஆண்டு கர்நாடகத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டி வீரப்பனால் கடத்தப்பட்ட ராஜ் குமாரை மீட்க உதவியதால் கர்நாடக காவல்துறையால் கைது செய்யப்பட்டு கர்நாடக சிறையில் 13மாதங்கள் வதை பட்டார்.*

மேலே குறிப்பிட்ட சோதனைகளைச் சந்தித்தவர். பெரியாரியம் பேசும் பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி.

*1976 ஆம் ஆண்டு மிசா சட்டத்தில் கைதாகி 1 ஆண்டு மிசா சட்டத்தில் கோவை சிறையிலிருந்தவர். மிசா சட்டத் தில் தமிழகத்தில் கைதானவர்களில் மிகவும் இளையவர்.*

*1991- ஆம் ஆண்டு. கொடிய தடா சட்டத்தில் கைது செய்யப்பட்டு மூன்றாண்டுகள் சிறை தண்டனை அனுபவித் தவர்.*

*1986- ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளை விடுதலை செய்யக் கோரி, சென்னை மத்திய சிறை முன் மறியல் செய்து கைதாகி வேலுர் சிறையில் இருந்தவர்.*

*1988- ஆம் ஆண்டு பம்பாயில் தமிழர்கள் தாக்கப் பட்டபோது, கொதித்தெழுந்து "பம்பாயில் தமிழன் தாக்கப் பட்டால் கோவையில் வட நாட்டான் கொல்லப் படுவான்" என்று இயக்கம் நடத்தி கைதாகி சிறை சென்றவர்.*



*சிறைக்கும் வீட்டுக்கும் வித்தியாசமில்லாமல் போராட்டம்- சிறை என்று செயல்பட்டதால், தோழர் களாலும், அனைத்துக் கட்சியின ராலும் "சிறைப்பறவை" என்று அழைக்கப்பட்டவர். பெரியாரியம் பேசியும் செயல்பட்டும் கொண்டிருக்கின்றவர் பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கு.இராமகிருட்டிணன்.*

*1989- ஆம் ஆண்டு- விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் தயாரித்ததாக வழக்குத் தொடர்ந்து கைது செய்யப்பட்டு 1 ஆண்டு சிறையில் அடைக்கப்பட்டவர்.*

*1991-ஆம் ஆண்டு கொடிய தடாவில் கைது. எந்தவித விளக்கமும் இன்றி மூன்றாண்டுகள் சிறை.*

*1995- ஆம் ஆண்டு வேலூர் கோட்டை முகாமிலி ருந்து விடுதலைப்புலிகள் தப்பிக்க உதவியதாக தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு வேலூரில் 1 ஆண்டு சிறை வாழ்க்கை வாழ்ந்தவர்.*

மேலே குறிப்பிட்ட கொடிய சோதனைகளைச் சந்தித்தும் இழப்புகளை மட்டுமே பெற்றும் இன்று வரை செயல்பட்டு வருபவர் பெரியாரியம் பேசும் பெரியார் திராவிடர் கழக ஆட்சிக் குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி. மேற்கண்ட பெரியாரியம் பேசும் தலைவர்களை எந்த ஏகாதிபத்தியமும், எந்த அரசாங்கமும் அரவணைக்க வில்லை. இராசீவ் பிரதமராக இருந்து போது அவர் சென்னை வந்த ஒவ்வொரு முறையும் (சுமார் 10 முறைகளுக்கு மேல்) தோழர் கு.இராம கிருட்டிணனும் தோழர் வெ. ஆறுச்சாமி யும் சிறைபட்டிருக்கிறார்கள் அரவணைக்கும் அரசாங்கம் செய்த வேலையா இது?

*இராமன் ஆண்டாலும் இராவணன் ஆண்டாலும் இராம கிருட்டிணனுக்கு சிறைதானா? என்று இயக்கமே நடந்ததே?* கொடிய அடக்குமுறைக்கு எல்லாம் பயந்து கொள்ளாமல் இயக்கம் நடத்துகிற தலைவர்கள் தமிழ்தேசியம் பேசினால் அடக்குமுறை வரும் என்று அச்சம் கொள்கிறார்கள் என்று சொல்கிறவரைப் பார்த்து எப்படிச் சிரிப்பது என்பது புரிய வில்லை.

*பல கொடிய அடக்குமுறைச் சட்டங்களின் தீவிரத்தைச் சந்தித்து இளமைக் காலங்களை இருட்டறையில் கழித்த தலைவர் களைப் பார்த்து கேலி செய்கின்ற தோழர் மணியரசன் அவர்களே நீங்கள் என்னென்ன அடக்குமுறைகளை சந்தித்து தமிழ் தேசியத்தை வளர்த் தெடுக்கிறீர்கள் என்று தோழர் கொளத்தூர்*

மணி கேட்டதில் என்ன தவறு? சரியான கேள்வியை சரியான நபர் கேட்டிருக்கிறார். சரியான பதிலைக் கூறாமல்,“கோட்பாடு வழிப்பட்ட இவ்விவா தத்தை தனிநபர் சிக்கலாக மாற்ற நாம் விரும்பவில்லை” என்று பித்தலாட்டத்தனமாக பின்வாங்குகிறார் தோழர் மணியரசன்.

“தோழர் பெ. மணியரசன் மீது என்னென்ன அடக்கு முறைகள் வந்தன என்ற கேள்வியின் பொருள் மணியரசன் என்கிற தனிநபர் சம்மந்தப்பட்டதல்ல. தமிழ்தேசியம் பேசியதால் தமிழ் தேசியவாதிகள் மீது என்னென்ன அடக்குமுறைகள் வந்தன என்பதுதான். தப்பித்துக் கொள்ளவேண்டி, ‘தனிநபர் சிக்கலாக’ மாற்ற நாம் விரும்பவில்லை என்கிறார். உண்மை அதுவல்ல. தோழர் மணியர சனோ மற்றைய தமிழ்தேசியவாதிகளோ எவ்வித அடக்குமுறைக்கும் ஆளாகவில்லை என்பதுதான் உண்மை. தமிழ் தேசியவாதிகள் அடக்கு முறைக்கு ஆளாகவேண்டும் என்று நாங்கள் விரும்புவதாக இதையும் திரித்து எழுதிவிடாதீர்கள்.

ஏனென்றால், பேப்பரும் பேனாவும் தானே உங்கள் செயல் திட்டக் கருவிகள், எழுதி எழுதியே உங்கள் ஆசைகளை தீர்த்துக் கொள்கிறீர்கள். செயல் வடிவில் சாதித்தது ஒன்றுமில்லையே. நீங்கள் எழுதி எழுதி இந்தத் தமிழர்களுக்கு என்ன லாபம் கிடைத்தது? தமிழர்களின் வாழ்க்கை நிலை ஒரு துளி கூட முன்னேறவில்லையே! மாறாக, பேப்பர் தட்டுப்பாடுதான் ஏற்படுகிறது. காகிதம் தயாரிக்க மரம் வெட்டப்பட்டு சுற்றுச் சூழல் தான் மாசுபட்டு கெட்டு விடுகிறது.

தில்லி ஏகாதிபத்தியமோ, இங்குள்ள அரசாங்கமோ எக்காரணம் கொண்டும் எந்தச் சட்டத்தின் கீழும் பெ.மணியரசன் போன்றவர்கள் மீது அடக்குமுறையைக் கொண்டு வரவில்லை. நல்ல செய்திதான். இது தொடர வேண்டிய நிகழ்வுதான். மாறுபட்ட கருத்தில்லை.

ஆனால், தோழர் பெ.மணியரசன் புதிதாக ஒரு சூத்திரம் சொல்லுகிறாரே, அந்த சூத்திரப்படி அவரை வகுத்துப் பார்த்தால், ஏகாதிபத்தியமும், மாநில அரசும் அவர்களைத்தான் அரவ ணைத்து வந்து உள்ளது புரியும். அப்படி யென்றால், தோழர் மணியரசனும் தமிழ் தேசியக் குழுக்களும் பார்ப்பனர்களுக்கு அடிவருடும் வேலையைச் செய்கிறார்கள் என்கிற முடிவுக்குத் தானே வர முடிகிறது.

இது எங்களுடைய கணிப்பு என்பதை விடவும் தோழர் மணியரசனின் “பார்முலா” கொடுத்த முடிவு என்பது தான் நூற்றுக்கு நூறு உண்மை.



“திராவிடம் என்பது தமிழ்த் தேசியத்தை மறுக்கும் கருத்தியலாகும். திராவிடம் இந்திய தேசியத்தின் இளைய பங்காளி. ஏனெனில், அது தமிழ்நாட்டை மட்டும் குறிக்காமல் மற்ற மூன்று மாநிலங் களையும் குறிக்கிறது”.

“திராவிடம் என்ற வரையறுப்பால் தமிழர்க்கும் தமிழ்த் தேசியத் திற்கும் நேர்ந்த பின்னடைவுகளையும் இழப்புகளையும் திறனாய்வு முறையில் கணக்கிடுகிறோம.;“

“இன்றைய சூழலில் தமிழ் இனத்திற்கும் தமிழ் தேசியத்திற் கும் த.பெ.தி.க வின் கருத்தியல் எவ்வளவு பெரிய தீங்கினைக் கொண்டு வந்து சேர்க்கும்? அதன் தமிழ் இனமறுப்புக் கொள்கை, இல்லாத இந்திய தேசியத்திற்கும், இன்றும் வலுவோடிருக்கின்ற பார்ப்பனியத்திற்கும் தான் துணை செய்யும்” “இந்தியம் தமிழர் அடையாளத்தை மறுப்பதைப் போலவே திராவிடம் தமிழர் தனித்தன்மையை மறுக்கிறது. தெலுங்கர், கன்னடர், மலையாளி, துளுவர், குடகர் போன்ற பலருள் ஒருவராகத் தமிழரைக் கரைய வைப்பது தான் திராவிடம்”.

“திராவிடம் என்பது தமிழர் அடையாளத்தை மறுக்கும் குட்டி இந்தியம்”

“திராவிடம் என்பது குட்டிப் பார்ப்பனியம்”

“திராவிடம் என்பது இந்திய தேசியத்தின் இளைய பங்காளி.

பார்ப்பனியத்தின் ஒன்று விட்ட பங்காளி”

“ஆரியத்துக்கு எதிர்ச்சொல் தமிழரே”

மேலே கண்டவை அனைத்தும், திராவிடம் என்ற வரைய றுப்பால் தமிழருக்கும் தமிழ் தேசியத்திற்கும் ஏற்பட்ட பின்ன டைவுகள் என்றும் திராவிடம் இந்திய தேசியத்திற்கும், பார்ப்ப னியத்திற்கும் பங்காளியாகி விட்டது என்றும். தமிழ் தேசியத் திற்கு திராவிடம் தடையாக உள்ளது என்றும் தோழர் மணியர சன் எழுதிக் குவித்த குப்பைக்குவியல்கள், இவை எதுவுமே உண்மை யற்றவை. உளறல்களின் உச்சகட்டம். ஏடறிந்த வரலாறு அனைத் தும் திராவிடர் இயக்கத்தின் தாக்கத்தையும், பெரியா ரின் உழைப்பையும், தியாகத்தையும் அதன் மூலம் தமிழரும் தமிழ் நாடும் பெற்ற முன்னேற்றத்தையும் வியந்து பாராட்டுகிறது. கல்வெட்டாய் காலங்காலமாய் இருக்கப் போகும்- திராவிடரின்- பெரியாரின் பணியை மீண்டுமொரு முறை இங்கே பதிவு செய்கிறோம்.

1938-ஆம் ஆண்டு இந்தித் திணிப்புக்கு எதிராக படை நடத்தி இந்தித் திணிப்பைத்தடுத்து தமிழைக் காப்பாற்றினாரே பெரியார்- இது, தமிழ், தமிழர் அடையாள மீட்புப் போரா? அல்லது தமிழர் அடையாளத்தை அழிக்கும் போரா?

இன்றைக்கும் மதக் கலவரங்களை நடத்திட பார்ப்பனர் களுக்கு பக்க பலமாக இருக்கும் வினாயகர் சிலையை 1953- இல் உடைத்து, வரும் காலத்திலும் வினாயகர் வழிபாடு மக்களை பிளவுபடுத்தும் ஆயுதம் என்று 'தீர்க்கதரிசனமாக' அன்றே வெளிப்படுத்தினாரே பெரியார். இது, பார்ப்பன,பனியா, வடவர் ஆதிக்க ஒழிப்புப் போர் அல்லவா? தமிழர் தன்மான- அடையாள மீட்புப் போர் அல்லவா?

1954- ஆம் ஆண்டு இரயில் நிலையங்களில் இந்தி பெயரை அழிக்கும் போராட்டத்தை பெரியார் நடத்தினார். பெரியார் அழித்த இந்தி எழுத்துக்களை மண்ணெண்ணெய் கொண்டு சுத்தம் செய்தார் ம.பொ.சி. திராவிடம் பேசிய பெரியார் வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்த்தார். தேசியம் பேசிய ம.பொ.சி வடநாட்டு ஆதிக்கத்திற்கு வால் பிடித்தார். திராவிடமும், திராவிடரும் தமிழைக் காப்பாற்ற போர் நடத்தியது. தமிழ்தேசியம் இந்தித் திணிப்புக்கு இணக்கம் காட்டியது.

இந்திய தேசியக் கொடி எரிப்புப் போராட்டத்தை 1955- ஆம் ஆண்டு பெரியார் நடத்தினார், -இதுதான் இந்திய தேசீயத்தின் இளைய பங்காளி செய்கிற வேவையா?- திராவிடம்தான் குட்டி இந்தியமா?

சாதியைப் பாதுகாக்கும் இந்திய அரசியல் சட்டத்தை 1957 ஆம் ஆண்டு 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெரியார் இயக்கத்தவர் எரித்தனரே! இப்போராட்டத்தில் 4000 பேர் கைது செய்யப்பட்டு 2 மாதம் முதல் 2 ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனை பெற்றனர். சிறைக்கு உள்ளேயும் வெளியேயும் 20- க்கு மேற்பட் டோர் இறந்து போயினர். பல குடும்பங்கள் அழிந்து சின்னா பின்னமாகிப் போனது. இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு எந்த வகையிலும் இணையாக இப்போராட்டம். பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு போர் அல்லவா?

தமிழர்களை இந்து மத அடையாளத்திலிருந்து மீட்டு எடுக்க நடத்த இன எழுச்சிப் போர் அல்லவா? சாதியின் பேரால் சூத்திரனாக இழிவுபடுத்தப்பட்ட தமிழர்களின் சுயமரியாதை காக்க நடந்த தமிழர் அடையாள மீட்புப் போர் அல்லவா?



தமிழ்நாடு நீங்கலாக இந்திய தேச வரைபடத்தை 1960-ஆம் ஆண்டு பெரியார் தீயிட்டுப் பொசுக்கினாரே! இது இந்திய தேசியத்திற்கு திராவிடம் வைத்த தீ அல்லவா?

"திராவிடம் தமிழ்நாட்டை மட்டும் குறிக்காமல் மற்ற மூன்று மாநிலங்களையும் குறிக்கிறது" என்கிற குதர்க்கவாதி களுக்கு-"தெலுங்கர், கன்னடர், மலையாளி, துளுவர், குடகர் போன்ற பலருள் ஒருவராக தமிழரைக் கரைய வைப்பது தான் திராவிடம்" என்று தான்தோன்றித் தனமாய்- தத்துப் பித்தாய்- உளறும் தரம் தெரியாதவர்களுக்கு வைக்கப்பட்ட தீ அல்லவா?

இராமாயணமும், இராமனும் இந்த நாட்டை ரத்தக் காடாக்கும் என்றும், அதை ஒழிக்காமல் தமிழர் சுயமரியாதையை மீட்க முடியாது

என்றும் அன்றே உணர்ந்த பெரியார், வடநாட்டவரின் ஆதிக்கச் சின்னமாக என்றைக்கும் இராமாயணமும், இராமரும் இருப்பார்கள்

என்று அறிந்த பெரியார், இந்திய தேசீயத்தை கட்டிக் காப்பாற்றும் இணையற்ற கருவியாய் இராமாயணமும், இராமரும் விளங்குவார்கள் என்று அறிந்த பெரியார் 1966-ல் தமிழ் நாடு முழுவ தும் இராமாயணத்தைக் கொளுத்தி போராடினார். 1971- இல் ராமன் படத்தை செருப்பால் அடித்து போராட்டம் நடத்தினார்.

இது, தமிழருக்கும், தமிழ் தேசியத்திற்கும் எதிரான செயலா? அல்லது பார்ப்பன, பனியா, இந்திய தேசியத்தற்கு எதிரான செயலா?

எல்லாம் தெரிந்தவர் போல வரலாற்றை இருட்டடிப்பு செய்து இட்டுக் கட்டி பொய்யுரைக்கும் தோழர் மணியரசன் இதற்கு பதில் சொல்ல வேண்டும். இதற்கெல்லாம் மேலாக. 1947 ஆகஸ்ட் 15-யை தமிழர்களுக்கு துக்க நாள். வெள்ளையனிடம் இருந்த அதிகாரம் பார்ப்பன, பனியா கும்பலுக்கு கைமாறிய நாள். என்று வரலாற்று சிறப்பு மிக்க பிரகடனம் செய்தாரே பெரியார். அது தானே இன்று வரை தொடர்கிறது.

"தந்தை பெரியாரின் உழைப்பை- தியாகத்தை- சாதனை களை மறுக்க முடியாது. மறந்தால் நன்றி கொன்ற இனமாக தமிழர்கள் மாறி விடுவார்கள்" என்று தோழர் மணியரசன் கூறினாலும், தந்தை பெரியாரை- அவர் கூறிய திராவிடம், திராவிடர் கருத்தியலை கொச்சையாக விமர்சனம் செய்வது தான் அவர் நூலின் மையக் கருத்தாகும். தந்தை பெரியாரின்

உழைப்பு- தியாகம் என்று பொத்தாம் பொதுவாக கூறாமல் அவருடைய போராட்டம் ஒவ்வொன்றையும் தனித்தனியாக எடுத்துக் கூறி விளக்கி இருக்கிறோம்.

இதில், திராவிடம், திராவிடர் என்பது தமிழர் மேம் பாட்டுக்கு எதிராக- மற்ற திராவிட இனங்களுக்கு ஆதரவாக எங்கே - எப்படி செயல்பட்டது என்பதை- உண்மையிலேயே மான உணர்ச்சி உள்ளவராக பொய்யுரைத்ததற்காக வருந்தக் கூடிய உள்ளம் உள்ளவராக- ; அல்லது சாதாரணமான நேர்மை நீதியிலே நம்பிக்கை உள்ளவராக இருந்தால் தோழர் மணியரசன் எடுத்துக் கூறட்டும்.

மாறாக, பாராட்டுவது போல எழுதி விட்டு, பச்சைப் பொய் பேசி, அவதூறுகளை கிளப்புவது மன நலம் உள்ளவர்கள் செயல் அல்ல. “பொதுவாக, மொழி பற்றிய, குறிப்பாகத் தமிழ்மொழி பற்றிய பெரியாரின் கருத்துகள் பிழையானவ, பெரியாரியல் ஆய்வாளர் வே.ஆனைமுத்து அவர்களே பெரியரின் மொழிக் கொள்கை சரியல்ல என்று திறனாய்வு செய்துள்ளார்” என்றும் தோழர் மணியரசன் குறிப்பிடுகிறார்.

மொழியைப் பற்றிய விமர்சனத்தை குறிப்பாகச் சொல்லா மல் பெரியாரின் கருத்தே பிழையானவை என்கிறார், அது அவருடைய கருத்து, ஆனால், பெரியாரியல் ஆய்வாளர் வே.ஆனைமுத்து அவர்களே பெரியாரின் மொழிக்கொள்கை சரியல்ல என்று திறனாய்வு செய்து உள்ளார் என்று கூறுகிறார். வே.ஆனைமுத்து அவர்களே கூறி விட்டால் அதற்கு மறுப்பே இல்லையா? வே.ஆனைமுத்து அவர்களின் கருத்துதான் பெரியாரி யலுக்கு முடிவானதா? இல்லையே! அந்தத் திறனாய்வு தோழர் வே.ஆனைமுத்து அவர்களின் சொந்தக் கருத்து.

அவ்வளவுதான். அதற்குமேல் அதற்கு வேறென்ன முக்கியத் துவம்?

மேலும், தோழர் வே.ஆனைமுத்து அவர்கள் மிகச் சிறந்த பெரியாரியல்வாதி என்பது உண்மை. ஆனால் அவரை பெரியாரி யல் ஆய்வாளர் என்ற வட்டத்திற்குள் தோழர் மணியரசன் சுருக்குகிறார். பெரியாரியல் வாதியை- பெரியாரியல் ஆய்வாள ராக்கியதன் நோக்கம் என்ன? தோழர் வே. ஆனைமுத்து அவர் களின் பார்வைக்கே இதனை விட்டுவிடுகிறோம்.

“தமிழ் இனத்திற்கும் தமிழ் தேசியத்திற்கும் த.பெ.தி.க. பெரிய தீங்கினை கொண்டு வந்து சேர்க்கும்” என்கிற தோழர் மணியரசனே, முக்கியமான ஒன்றை நினைவில் கொள்ளுங்கள்.



தந்தை பெரியாரின் இயக்கத்தின் தொடர்ச்சியாக செயல் பட்டு வரும் பெரியார் திராவிடர் கழகமும் பெரியாரின் கொள்கைப்படியே தமிழ் மொழிக்கும், தமிழர்களின் சுயமரி யாதை வாழ்க்கைக்கும் உற்ற துணையாக, உயர்த்தும் ஏணியாக இருந்து வருகிறது. தமிழ்மொழி பயிற்று மொழியாக வேண்டும் என்கிற கோரிக்கைகளை வைத்து நாடெங்கும் பிரச்சாரம், கருத்தரங்கம், போராட்டம் நடத்தினோம். தாய்த் தமிழ் பள்ளி களின் வளர்ச்சிக்கு எங்கள் தோழர்கள் உறுதுணையாக இருந் தோம். அந்தப் பள்ளிகளின் வளர்ச்சியை சிதைத்தவர்கள் தமிழ் தேசியம் பேசுகின்ற தங்கக் கட்டிகள் தானே தவிர பெரியார் இயக்கத்தவரல்ல.

1999-இல் தமிழ் வழிக் கல்வி எதிராக செயல்பட்டு வந்த ஆங்கில வழி- மெட்ரிக் பள்ளிகளின் தமிழ் விரோதப் போக்கைக் கண்டித்து பேரணியும் ஆர்ப்பாட்டமும் நடந்தது.

2000- ஆம் ஆண்டு தமிழ் வழிக் கல்வியை எதிர்த்துப் பேசிய ஜெயலலிதா கொடும்பாவி நாடெங்கும் எரிக்கப்பட்டது.

அதே 2000- ஆம் ஆண்டு தமிழ் வழிக் கல்விமுறை ரத்து செய்து தீர்ப்புக் கூறிய உயர்நீதி மன்றத்தைக் கண்டித்து. உயர்நீதி மன்றத் தீர்ப்பு நகல் நாடெங்கும் எரிக்கும் போராட்டம் நடை பெற்றது. கடவுள் இல்லை- கோவிலுக்குப் போகாதீர்கள் என்கிற பிரச்சாரத்தை காலமெல்லாம் செய்த பெரியாரின் இயக்கம் தான் கோவிலுக்குள் தமிழ் மொழிக்கும், தமிழர்களுக்கும் உள்ள உரிமைகளுக்காக போராடியது. வெற்றியும் கண்டது.

1998- இல் தமிழ்வழியில் வழிபாடு நடத்த வேண்டும் என்கிற முழக்கத்துடன் கோவையிலும் பழனியிலும் பேரணியும், பொதுக் கூட்டமும் மாநாடும் நடத்தியது பெரியார் இயக்கம் தான்.

1986 ஆம் ஆண்டு மதுரை தலைமைத் தபால்நிலையத்தைப் பார்வையிட வந்த நடாளுமன்ற உறுப்பினர் குழுவில் இருந்த வடநாட்டு இந்திவெறி பிடித்த எம்.பி. தமிழ் இருந்த பெயர் பலகையைத் தூக்கி எறிந்ததைக் கண்டித்து களத்தில் இறங்கியது பெரியாரியம் பேசும் - திராவிடர் - திராவிடம் பேசும் திராவிடர் கழகம் தான். அதைத் தொடர்ந்தே மற்ற கட்சிகள் எல்லாம் களத்தில் இறங்கி இந்தி எதிர்ப்புப் போர் வலுவடைந்தது என்பது வரலாறு.

2003-ஆம் ஆண்டு சாம்ராஜ் நகரிலிருந்து கோவை- பொள்ளாச்சி வழியாக தேசிய நெடுஞ்சாலை எண்-29-ல் பழைய

மைல் கற்கள் அகற்றப்பட்டு, இந்தியில் எழுதிய மைல்கல் வைக்கப்பட்டபோது அதை அறிந்த பொள்ளாச்சி நகர தந்தை பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் புகைப்படத்துடன் செய்தி வெளியிட்டு இந்தி மைல்கல்லை அகற்றாவிட்டால் அதை நாங்கள் அகற்றுவோம் என போராட்டம் அறிவித்தது திராவிடம் - திராவிடர்கருத்தியல் பேசும் தந்தை பெரியார் திராவிடர் கழகம் தான்.

2005- ஆம் ஆண்டு-"தமிழைவிட சமஸ்கிருதமே உயர்ந்தது" என்று எகத்தாளம் பேசிய எழுத்தாளர் ஜெயகாந்தன் கோவையில் கலந்துகொள்ள வந்த நிகழ்ச்சியில்,"தமிழில் பேசாதே, சமஸ் கிருதத்திலேயே பேசு - தமிழில் எபுதாதே- சமஸ்கிருதத்தி லேயே எழுது" என்று முழக்கமிட்டு, மன்னிப்பு கேட்க வைத்து- தமிழுக்கு எதிரானவர்களை சமஸ்கிருதத்திற்கு ஆதரவானவர்களை எதிர்த் துப் போராடியதும் திராவிடம், திராவிடர் கருத்தியல் பேசும் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தினர் தான்.

ஆக தமிழ்மொழி பயிற்றுமொழியாக, வழிபாட்டுமொழி யாக, ஆட்சிமொழியாக விளங்கவேண்டும் என்பதில் உறுதியோடு இருந்து இன்றுவரை போராடி வருவது பெரியார் இயக்கம் தான்- திராவிடம் பேசும் இயக்கம் தான். தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் திராவிட இனக்கருத்தியல் தமிழர் மேம்பாட்டிற்கு தடையாக உள்ளது என்றும் தோழர் மணியரசன் கூறுகிறார். தந்தை பெரியாரின் தொடர்ச்சியாக இயங்கி வந்த திராவிடர் கழகம் (இராமகிருட்டிணன் பிரிவு) தமிழ் நாடு திராவிடர் கழகம், இப்போது செயல்பட்டு வரும் பெரியார் திராவிடர் கழகம் ஆகியன தமிழர்களின் உரிமைக்காக போராடிய களங்களைக் கவனிப்போம்.

ஈழத்திலே அமைதியை நிலைநாட்டச் சென்றோம் என்கிற பெயரிலே ஈழம் சென்ற அமைதிபடை, தமிழர்களை கொன்று குவிக்கும் கொலைகாரப் படையாய் மாறி தமிழர்களை அழித்த போது, இந்திய அமைதிப் படையையும், இந்திய அரசையும் கண்டித்து 1000 மண்டை ஓடுகளுடன் ஊர்வலத்தையும் 21.02.1988- லே நடத்தி தமிழர்களின் உயிரையும் உரிமையும் காக்கப் போராடியதும், அத்தோடு தமிழீழத்தில் இந்திய இராணுவத் தின் கொலை வெறியாட்டத்தை விளக்கி 01.06.1988- இல் காயக்கட்டு ஊர்வலம் நடத்தி தமிழகத்தில் எழுச்சியை உருவாக் கியதும் திராவிடம் பேசிய திராவிடர் கழகம் (இரா)தான்.

விடுதலைப் புலிகளின் தளபதி கிட்டு போன்றவர்களை சென்னை சிறையில் அடைத்து வைத்ததைக் கண்டித்தும்



அவர்களை உடனடியாக விடுதலை செய்யக்கோரியும் நூற்றுக் கணக்கானோருடன் சென்னை மத்திய சிறைமுன் 20.08.1988 இல் மறியல் நடத்தி கைதாகி சிறைப் பட்டதும், மாணவர்கள் மாநாடு நடத்தியதும், பேரணி நடத்தியதும், இந்திய அமைதிப் படை ஈழத்தைவிட்டு வெளியேறக்கோரி

25.06.1989- இல் கோவையில் இருந்து சென்னை வரை மிகப்பெரிய சைக்கிள் பேரணி நடத்தி இடையிலே கைது செய்யப்பட்டு சிறை சென்றதும் திராவிடம், திராவிடர் இனம் கருத்தியல் பேசிய திராவிடர் கழகம் (இரா) தான்.

இந்திய இராணுவத்தால் இலங்கைச் சிறையில் அடைக்கப் பட்ட விடுதலைப் புலிகளை விடுதலை செய்யக்கோரி 17.02.1990. இல் பேரணி யும் பொதுக் கூட்டம் நடத்தியதும், 17.07.1990 -இல் இலங் கைத் தூதரகம் முன்பு சிங்கள தேசியக் கொடி எரிப்புப் போராட்டம் நடத்தியதும். 30.01.1991-இல் தமிழீழத்தையும் தமிழீழப் போரையும் பற்றிய இந்திய அரசின் பொய்ப் பிரச் சாரத்தைக் கண்டித்தும் தீப்பந்த ஆர்ப்பாட்டப்பேரணி நடத் தியதும். திராவிடம் பேசிய திராவிடர் கழகம் (இரா) தான்.

எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது 1985 ஆம் ஆண்டுவாக்கில் தமிழகத்தில் இருந்த விடுதலைப் புலிகளின் ஆயுதங்களை தமிழக காவல்துறை பறித்து விட்டது. அப்பொழுது தமிழ்நாடு காவல்துறை தலை வராக மோகன்தாஸ் என்ற அதிகாரி இருந்தார். அவர் ஒரு மலையாளி. இந்த நடவடிக்கையை அவர் தான் தலைமையேற்று நடத்தியிருந்தார். விடுதலைப்புலிகளின் ஆயுதங்களை திரும்ப ஒப்படைக்கக்கோரி திராவிடர் கழகம் போராடியது.

அப்பொழுது இச் செய்தியைப் பற்றி மலையாள பத்திரி கையான"மலையாள மனோரமா" "புலி வேட்டையாடினார் மலையாளி மோகன்தாஸ்" என்று எழுதி தமிழர்களை மலையாளி அடக்கினார் என மகிழ்ந்து போனது. உடனே, தமிழர்கள் உரிமைக்கும் போராளிகளான விடுதலைப்புலிகளையும். தமிழர் களையும் இழிவுபடுத்தி எழுதிய மலையாள மனோரமா பத்திரிகை கோவையில் விற்பனைக்காக இரயில் நிலையத்தில் கட்டுக் கட்டாய் வந்து இறங்கிய போது அங்கேயே அந்தப் பத்திரி கையை தீ வைத்துக் கொளுத்தி தமிழர்களின் எதிர்ப்பை உறுதி செய்தது திராவிடர் இனக் கொள்கை பேசும் பெரியாரின் திராவிடர் கழகம் தான்.

தமிழீழத்தில் தமிழர்களைக் கொன்று குவித்த சந்திரிகாவின் கொடும்பாவி எரிப்புப் போராட்டத்தை 16.07.1995-இல் நடத்திய தும் தமிழர்களை- இனப் படுகொலை செய்யும் சிங்கள வெறியர்களைக் கண்டித்து 11.11.95-இல் சென்னை இலங்கைத் தூதரகம் முற்றுகைப் போராடடம் நடத்தியதும். பேரணி ஊர்வலம், பொதுக் கூட்டம் நடத்தி தமிழர்களின் உரிமைக் குரலை உலகு அறியச்செயத்தும் திராவிடம் பேசும் திராவிடர் கழகம் (இரா) தான்.

காவிரி நதிநீர் பிரச்சனையில் தமிழகத்தின் உரிமைக்கு எதிராக தமிழர்களுக்கு துரோகம் செய்த ஜனாதிபதி வெங்கட் ராமன் கொடும் பாவியை 09.08.1994-இல் எரித்து போராடியதும் திராவிடம பேசும் திராவிடர் கழகம் தான்.

எல்.ஐ.சி.-யின் இந்தியிலே கையெழுத்துப் போடவேண்டும் என்கிற உத்தரவு நகலை 14.11.1997-இல் எரித்துப் போராட்டம் நடத்தியதும்

திராவிடர், திராவிடம் பேசும் திராவிடர்கழகம் (இரா), பெரியார் திராவிடர் கழகம் தான்,

இராசீவ் காந்தியின் கொலை பற்றி விசாரணை நடத்திய ஜெயின் கமிசன் தமிழர்களை இழிவுப்படுத்தும் வகையில் அறிக்கை

வெளியிட்டதைக் கண்டித்து 28.11.1997-ல் ஜெயின் கமிசன் அறிக்கையை கழுதை தின்னும் போராட்டம் நடத்தி தமிழர்களை இழிவுப்படுத்துவதை சகிக்க மாட்டோம் என்று தமிழர்களின் ஆவேசக் குரலை உலகுக்கு உணர்த்தியதும் திராவிடம் பேசும் திராவிடர் கழகம் (இரா) தான்.

கர்நாடகத்தில் பணிபுரிந்த 19 தமிழர்களின் பணியை இரத்து செய்த மத்திய அரசைக் கண்டித்து கோவையில் ரயில் மறியல் போராட் டம் (17.02.1999) நடத்தி தமிழர்களின் உரிமைப் போரில் முன் நின்றதும், திராவிடம், திராவிடர் கருத்தியல் பேசும், பெரியாரின் பெரும் படை யான திராவிடர் கழகம் (இரா) தான்.

கர்நாடகத்தில் 19 தமிழர்களை மத்திய அரசு பணிநீக்கம் செய்ததால், இனிமேல் தமிழ்நாட்டில் தமிழருக்கே வேலை, பிற மாநிலத்தாருக்கு இங்கே வேலை இல்லை என்கிற முழக்கத் தோடு தமிழகத்தில் பிற மாநில அதிகாரிகள் பணி புரியும் அலுவலகங்கள் முற்றுகைப் போராட்டத்தை 29.04.1999-இல் நடத்தி தமிழ்நாடு , தமிழர் உரிமைகளை தட்டி எழுப்ப களம்



கண்டதும் திராவிடம், திராவிடர் என்று பேசினாலும் அதற்குள் தமிழர் உரிமைக்கான- விடுதலைக்கான செயல்பாடுகளையே முன்னிறுத்தும் பெரியாரின் தொடர்ச்சியான தமிழ்நாடு திராவிடர் கழகம் தான்.

இரயில்வேத் துறையில் கலாசி வேலைக்கு இந்தி, ஆங்கிலத்தில் தேர்வு நடத்துவது என மத்திய அரசின் உத்தரவை எதிர்த்து 09.07.1999 இல் சுமை தூக்கும் பேரணி நடத்தி ஆர்ப்பாட்டம் செய்து தமிழ் மொழிக்காகப் போராடியதும் திராவிடம் பேசும் தமிழ்நாடு திராவிடர் கழகம் தான்.

முல்லை பெரியாறு அணையில் இருந்த தமிழகப் பொதுப் பணித்துறை அதிகாரிகளையும், ஊர்ழியர்களையும் கேரள போலீசார் காட்டுமிராண்டித்தனமாக தாக்கியதைக் கண்டித்து 18.11.2000-இல் கேரள முதல்வர் ஈ.கே.நாயனார் கொடும்பாவி எரித்துப் போராட்டம் நடத்தியதும், அதுவரை, கம்பம் பள்ளத் தாக்கு மற்றும் மதுரைப் பதுதியிலே மட்டும் தெரிந்து இருந்த முல்லை பெரியாறு அணை பற்றிய பிரச்சனையை தமிழ்நாடு முழுக்க அறியச் செய்ததும்; திராவிடம், திராவிடர் என்று பேசினாலும். மலையாளியும் திராவிடர் என்று பேசாமல், தமிழர்களின் உரிமை காக்க- உலகம் புரிந்து கொள்ள- தமிழர்கள் பெற வேண்டிய உரிமைக்காகப் போராடியதும் தமிழ்நாடு திராவிடர் கழகம் தான்.

சங்கரமடத்தின் கல்வி நிலைய விடுதிகளில் பார்ப்பன ரல்லாத தமிழ் மாணவர்களுக்கு சாதியின் பெயரால் தனி விடுதி ஏற்படுத்தி தீண்டாமையைக் கடைபிடித்துவந்த சங்கர மடத்தைக் கண்டித்து 12.09.2001 அன்று காஞ்சி சங்கர மடத்தின் முன்பு மாபெரும் முற்றுகைப் போராட்டம் நடத்தி தமிழர்களின் சுயமரியாதைக்காகப் போராடியதும் திராவிடர் இனக் கொள்கை பேசும் தந்தை பெரியார் திராவிடர் கழகம் தான்.

திண்ணியத்தில் தலித் மக்களை மலம் தின்ன வைத்த சாதி வெறியர்களைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தை நடத்தி, தமிழர் களின் சமத்துவத்திற்காக போராடியதும் திராவிடம் பேசும் தந்தை பெரியார் திராவிடர் கழகம் தான்.

நீலகிரி மலையில் உற்பத்தியாகி தமிழகத்தின் பாசனத் திற்குப் பயன்பட்டு வரும் பவானி ஆற்றின் குறுக்கே முக்காலி என்ற இடத்தில் கேரள அரசு அணை கட்ட எடுத்த நடவடிக்கை அறிந்து, தோழமை அமைப்புகளையும், விவசாயிகளையும் ஒன்று திரட்டி மேட்டுப் பாளை யத்திலும் சத்திய மங்கலத்திலும்

2003 ஆம் ஆண்டு துவக்கத்தில் மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தியதும், துண்டறிக்கைகள் மூலம் கேரள அரசின் அத்து மீறலை விளக்கிக் காட்டியும். உடனடியாக நடவடிக்கை எடுக்க மத்திய அரசை, மாநில அரசை வலியுறுத்தியதால் கேரள அரசின் நடவடிக்கை முறியடிக்கப்பட்டது திராவிடம், திராவிடர் இனக் கொள்கை பேசினாலும், எந்நிலையிலும், எந்தமாநிலப் பிரச் சனை என்றாலும் தமிழர், தமிழ்நாடு ஆகியவற்றின் நலனுக்காகவே- உரிமைக்காகவே பெரியாரின் காலத்திலிருந்து போராடி வருகின்ற திராவிடர் இயக்கத்தின் தொடர்ச்சியான- நீட்சியான தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் தொடர் போராட்டம் தான் காரணமாகும்.

அனைத்து சாதியினரும்- அனைத்து தமிழரும் அர்ச்சகராக வேண்டும் என்கிற நீண்ட நெடிய போராட்டத்தின் முக்கிய கட்டமாக 2004 ஆம் ஆண்டு காஞ்சியில் நடைபெற்ற கோயில் கருவறை நுழைவுப் போராடடத்தை நடத்தி 865 தோழர்கள் கைதாகி தமிழகத்தையே தன்பக்கம் திரும்பிப் பார்க்க வைத்ததும், கோயிலில், வழிபடும் மொழியானாலும், வழிபாடு நடத்துவதாலும் தமிழ், தமிழர் உரிமைக்காகவே தொடர்ந்து போராடி வருவதும் திராவிடம் திராவிடர் என்று பேசும் தந்தை பெரியார் திராவிடர் கழகம் தான்.

பாலக்காடு இரயில்வே கோட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டும். அதில் ஒன்று சேலத்தை தலைமையிட மாகக் கொண்டு திகழ வேண்டும் என்று 1950- களிலேயே தந்தை பெரியார் கூறியிருந்தார். அதைத் தொடர்ந்து, பாலக்காடு கோட்டம் மலையாளிகளின் கோட்டையாகத் திகழ்கிறது. அதனால் கேரள மாநிலம் மட்டுமே இரயில்வேத் துறையில் வளர்ச்சி பெறுகிறது. தமிழ்நாடு இரயில்வேத் துறைக்கும் வருவாயை அள்ளி அள்ளிக் கொடுத்தாலும் மலையாள அதிகாரிகளால் திட்டமிட்டே புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது. எனவே பாலக்காடு கோட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு சேலம் கோட்டம் உருவாக்க வேண்டும் என்று நீண்ட காலம் போராடி வந்ததும்,கோட்டம் பிரிக்க அரசு முடிவெடுத்த போது, கோவை, திருப்பூர் ஈரோடு, நீலகிரி போன்ற வருவாய் அதிகமுள்ள தமிழகப் பகுதிகளை பாலக்காடு கோட்டத் தோடு வைத்துக் கொள்வது என்ற மத்திய அரசின் முடிவை எதிர்த்து எரிமலையாய் வெடித்துக் கிளம்பி தமிழர்களின்- தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட தொடர் போராட்டம் நடத்தி வெற்றி கண்டதும், திராவிடம்- திராவிடர் இனக் கொள்கை பேசினா



லும் தமிழர்களின் உரிமைக் கான இயக்கமாய்த் திகழும் தந்தை பெரியார் திராவிடர் கழகம் தான்.

சென்னையிலிருந்து கேரளாவுக்குச் செல்லும் வெஸ்ட் கோஸ்ட் அதி விரைவு இரயில், தமிழகத்தின் மிகப் பெரும் தொழில் நகரமான கோவை. திருப்பூரில் நிற்காமல் செல்லும் என இரயில்வேத் துறை அறிவித்தது. அதே அதிவிரைவு இரயில் கேரள எல்லைக்குள் சென்றதும் பயணிகள் வண்டியாக சிற்றூர்களில் எல்லாம் நின்று சென்றது. அப்பட்டமான தமிழர் விரோதச் செயலை மலையாள அதிகாரிகளின் கோட்டையாக உள்ள இரயில்வே நிர்வாகம் செய்தது. அதற்கு வக்காலத்து வாங்கி இரயில்வேத் துறை இனண அமைச்சரான தமிழகத்தைச் சார்ந்த பா.ம.க.வின் வேலுவும் பேசினார். தமிழர்களின் உரிமை காக்கவே பிறந்தவர்கள்- திராவிடம், திராவிடர் கருத்தியலால் தமிழர் மேம்பாடு தடை செய்வதை தகர்த் தெறியவே கருத்தரித்து வந்த காவல்காரர்கள் எல்லாம் அப்போது எந்த ஊரில் - எந்த நிலையில் இருந்தார்கள் என்று தெரியவில்லை. ஆனால்- திராவிடம், திராவிடர் இனக்கொள்கை பேசும் பெரியார் திராவிடர் கழகம் தான், வெஸ்ட் கோஸ்ட் இரயிலை தினமும் கோவையிலும், திருப்பூரிலும் அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்து நிறுத்தி, ஒரு மணி நேரம், இரண்டு மணிநேரம் நிற்கவைத்து அதன் மூலம் இந்திய இரயில்வேயின் இரயில் நேரங்களில்- மிகப் பெரிய மாற்றத்தை செய்து இரயில்வேத் துறையை திணறடிக்கச் செய்தனர். ஒருவார காலமாக இரயில்வேத்துறை எத்தனையோ துறை சார்ந்த நுணுக்கமான வேலைகளைச் செய்தும், அதையும் மீறி தோழர்கள் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் இரயிலை நிறுத்திக் காட்டியதால் இரயில்வே நிர்வாகம் மிரண்டு போனது. என்ன மாற்று வழி செய்வதென தெரியாமல் விழித்தது. வேறு வழி இன்றி போராட்டத்திற்கு பணிந்து இரயிலை கோவை- திருப்பூர், பகுதியில் நிறுத்தியது. இரயில்வே நிர்வாகம். மலையாளிகளின் சதியை முறியடித்து தமிழர்களின் உரிமையை நிலைநாட்டியது திராவிடர் இனக்கொள்கை பேசும் பெரியார் திராவிடர் கழகம் தான்.

ஈழத்தில் ஆதரவற்ற குழந்தைகளின் காப்பகமான செஞ்சோலை மீது சிங்கள இன வெறியர்களின் கொடூர கொலை வெறித் தாக்குதல்களைக் கண்டித்து பேரணி- ஆர்ப்பாட்டம் கிளர்ச்சிகள் செய்ததும் திராவிடர் இனக் கொள்கை பேசும் பெரியார் திராவிடர் கழகம் தான்.

கேரள மாநிலத்தின் எல்லைப் புற மாவட்டமான கோவை மாவட்டத்தில் சிறுமுகைப் பகுதியில் இராசாயனக் கழிவுகளை யும் உடுமலை பொள்ளாச்சிப் பகுதியில் மருத்துவக் கழிவுகளை யும் கேரளாவில் இருந்து கொண்டு வந்து கொட்டி தமிழ்நாட்டு மண்ணை நச்சுப்படுத்திய மலையாளிகளின் கொட்டத்தை அடக்கி தமிழ் மண்ணைக் காப்பாற்றியதும் திராவிடர் இனக் கொள்கை பேசும் பெரியார் திரா விடர் கழகம் தான்.

திராவிடம், திராவிடர் என்பது மூன்று மாநிலங்களையும் மூன்று மாநில மக்களையும் குறிக்கிறது. தமிழ் நாட்டையும், தமிழர்களையும் குறிக்கப்பயன்படாது, தமிழர்களின் மேம் பாட்டிற்கு பின்னடைவுகளையும் இழப்புகளையும் ஏற்படுத்தும் என்கிற தோழர் மணியரசனின் கூற்று எவ்வளவு தூரம் பொய்யானது, புரட்டுத்தனமானது என்பதை மேலே கண்ட வரலாறு உணர்த்தும்.

மற்றவர்கள் சிந்தித்து, உருவாக்கிய ஒரு திட்டத்தை செயல் படுத்தியதைத்தான் நான் சிந்தித்தேன். அதுவும் விட்டத்தை வெறித்துப் பார்த்து கண்டறிந்தேன் என்று கதை சொல்லுபவர் களின் மோசடித் தனத்தைப் போல, வரலாற்று உண்மைகளை மறைத்து திராவிடம், திராவிடர் என்ற கருத்தியல் தான் தமிழர் களுக்கு எதிராக உள்ளது என்று சமுதாயக்கண்ணோட்டம் இல்லாமல், தேர்தல் அரசியலில் குப்பை கொட்ட முடியாமல்! சீசீ. இந்தப்பழம் புளிக்கும்' என்று தனி இயக்கம் கண்டு தலைவர் களாக முயன்றவர்கள்- முயலுபவர்கள் பேசுவதும் எழுதுவதும் வரலாற்று வன்முறையேயாகும்.

பெரியாரின் திராவிடர் இயக்கம் எத்தனையோ உரிமை களை மீட்டுக் கொடுத்துள்ளது. அதில் சிலவற்றைத் தான் உதாரணமாகக் காட்டினோம். இந்நிலையில், திராவிடர் என்று சொல்வதை திராவிட இயக்கத்தார் கைவிட வேண்டும் என்கிறார் தோழர் மணியரசன். மேற்கண்ட உரிமை மீட்புப் போரைத் தொடர, திராவிடம், திராவிடர் என்று சொல்வது தவிர்க்க முடியாத வரலாற்றுக் காரணி என்பதையும் எடுத்து ரைத்தோம். பார்ப்பன, பனியா கும்பல்களின் சதியிலிருந்து தமிழர்கள் முழுவிடுதலை பெற திராவிடர், திராவிடம் என்ற கருத்தியல் எந்த நாளும் தேவையென்பதால் அதை நாங்கள் தொடர்வதற்காக பெருமை கொள்வோம். அதுபற்றி தோழர் மணியரசன் போன்ற வர்கள் அறிவுரை கூற அருகதையற்றவர் கள் என்பதையும் தெரிவோம். நட்பு சக்திகள் என்ற உணர்விலே ஒரு சில உடன்பாடு கொண்ட செயல்களில் இணைந்திருந்தோம்.



ஆனால், தோழர் மணியரசன் போன்றவர்களின் பெரியாரியல் எதிர்ப்புணர்ச்சி வெளிப்பட்ட நிலையில் அதை எதிர்த்து களமிறங்கவும் தயங்கி டோம். தோழர் மணியரசன் தனது நூலில், அண்ணாவைப் பாராட்டுகிறார். பாவாணரை பாராட்டுகிறார். பாவேந்தர் புரட்சிக்கவிஞரைப் பாராட்டுகிறார். இவர்களெல் லாம் திராவிடத் திற்கு எதிரானவர்கள் என்கிறார். ஆனால் பெரியாரை பாராட்டு வது போல கொச்சையாக விமர் சிக்கிறார்.

அறிஞர் அண்ணாவின் திராவிடம், திராவிடர் கொள்கை அறிந்ததே. பாவாணரின் எழுத்துக்களில் திராவிடர் அல்லது தமிழர் என்கிற எடுத்துக்காட்டை மேலேயே கண்டோம். பாவேந்தரும் அப்படியே பெரியாரின் கருத்தைப் பரப்பியவர். அறிஞர் அண்ணா, பாவாணர், பாவேந்தர் ஆகிய மூவரும் திராவிடம், திராவிடம் என்ற கருத்தியலுக்கு ஆதரவாக இருந்த போதும் அவர்களைப் போற்றிய தோழர் மணியரசன், அதே கருத்தின் மூலகர்த்தாவான பெரியாரை மட்டும் விமர்சிப்பது எதன் தொடர்ச்சி? என்பதை நாம் சிந்திக்க வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன் திராவிடம். திராவிடர் என்பதை எதிர்த்து "திராவிடத்தால் வீழ்ந்தோம்" என்று நூல் எழுதிய குழப்பவாதி குணாவாலும் அண்ணா, பாவாணர், பாவேந்தர் ஆகியோர் பாராட்டப்பட்டார். பெரியார் விமர்சிக்கப்பட்டார்.

அதன் மறுபதிப்பாய்த்தான் தோழர் மணியரசன் வெளிப் படுகிறார். அவரின் சாயமும் வெளுத்து விட்டது. அவரைப் போன்ற தமிழ்த்தேசியவாதிகளும் பெரியார் எதிர்ப்பாளர்களா கவே காட்டிக் கொள்கிறார்கள். திராவிடம், திராவிடர் என்று பேச வேண்டியதன்- குறிப்பிடப்படவேண்டியதன் காரணத்தை- தேவையைத் தந்தை பெரியார் மிகத்தெளிவாக, எவ்வித குழப்ப த்திற்கும் இடம் தராமல் எடுத்துக்காட்டி உள்ளார். அதன் தத்துவம்- நடைமுறையும் இன்று வரை சரியாகவே இருந்து வருகிறது. ஆனாலும், திராவிடர் என்று குறிப்பிட்டா லும்- தோழர் மணியரசன் கூறுவதைப் போலல்லாமல் - மற்ற மூன்று மாநிலத்தாரின் நலனுக்கான இயக்கமாக இல்லாமல், முழுக்க முழுக்க தமிழ்மொழி, தமிழர், தமிழ்நாடு போன்றவற்றின் உரிமைக்கான- விடுதலைக்கான இயக்கமாகவே பெரியாரின் இயக்கம் தந்தை பெரியார் காலத்திலிருந்து இன்றுவரை தொடர்ந்து இயங்கி வருகிறது. இந்த இயக்கத்தின் இறுதி இலட்சியமே தமிழர்கள் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக முன்னேறி உலக அரங்கில் மற்ற இனங்களைப் போல வாழ வேண்டும்என்பதே.

இந்த இயக்கத்தை- தந்தை பெரியாரைப் பற்றி குழப்புகின்ற கோடாரிக்காம்புகளை தமிழர்கள் புரிந்து கொண்டு அவர்களைப் புறந்தள்ளவேண்டும் என்பதே பெரியார் திராவிடர் கழகத்தின் கருத்தாகும்.